விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 31 சனிக்கிழமை (15..07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 208

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## க.கா.குழுவிற்கு தெரியப்படுத்திய பின்பே இராணுவத்தினர் மீது பதில் தாக்குதல்

### தயாமோகன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

வாகனேரி வலிந்து தாக்குதல் மற்றும் பதில் தாக்குதல் தொடர்பாக மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் விளக்கியுள்ளார்.

இராணுவத்தினர் பெருந்தொகையான எண்ணிக்கையில் நேற்று அதிகாலை எங்களுடைய கட்டுப்பாட்டுப் பகுதியான வாகனேரி குளத்துமடு கிராமங்களை நோக்கி முன்னேறி வலிந்து தாக்குதல் நடத்தினர். அதில் எங்கள் போராளிகள் நான்கு பேர் வீரச்சாவடைந்து விட்டனர்.

எங்கள் போராளிகளைத் தாக்கியிருக்கிறார்கள். அவர்களைப் பின்வாங்கச் சொல்லுங்கள் அல்லது திருப்பித் தாக்குவோம் என்று இரு மணித்தியாலங்களுக்கு முன்னரே கண்காணிப்புக்குழுவுக்குத் தெரிவித்தோம்.

இத்தகவலை இராணுவத் தரப்பினருக்கு கண்காணிப்புக்குழு தெரிவித்தது. ஆனால் தேடுதல் நடவடிக்கை ஒன்றுக்காக இராணுவத்தினர் சென்றுள்ளதாகவும் அது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி அல்ல என்றும் இராணுவத்தின.. கூறியதாக கண்காணிப்புக்குழுவினர் பதில் தந்தனர்.

எங்கள் போராளிகளைத் தாக்கிவிட்டு அவர்கள் நிற்பதை (10 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவடைந்த போராளிகள்

(மட்டக்களப்பு)

வாகனேரிப் பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கை முறியடிப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர்.

கப்டன் நவலோகன் (நாகராசா குகன், முறிப்பு முள்ளியவளை, முல்லைத்தீவு), 2ஆம் லெப். வீரா (மாசிலாமணி மகேஸ்வரன் குளத்துமடு, வாகனேரி மட்டக்களப்பு), கப்டன் ப.வதனன் (கணேஸ் பிரபாகரன் ,திகிலி வெட்டை சந்திவெளி, மட்டக்களப்பு),2 ஆம் லெப்.இளவீரன் (கந்தையா கோணேஸ் , பாட சாலை வீதி சந்திவெளி மட்டக்களப்பு.

(ச–5)

## மட்டக்களப்பு வாகனேரியில்

# இராணுவத்தின் தாக்குதல் முயற்சி

# விடுதலைப்புலிகளால் முறியடிப்பு

## 12 இராணுவத்தினர் பலி: 4 போராளிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகனேரியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியின் தாக்குதல் முயற்சி விடுதலைப்புலிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில் 12 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். மேலும் ஒரு இராணுவச் சிப்பாய் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளார். ஆயுதங்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளன. (10 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேயின் இலங்கைக்கான பதில் தூதுவர் எட்லார் பேசினேட் நேற்று சந்தித்து பேசினார். இச் சந்திப்பு நேற்று தமிழீழ அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நடைபெற்றது.

## அம்பாறை–திருகோணமலையில் பரஸ்பரம் எறிகணைத் தாக்குதல்

### மூன்று இராணுவம்: போராளி பலி

(பொலநறுவை)

பொலநறுவை எல்லைப்பகுதியான மாதுரு ஓயாவில் நேற்று நடைபெற்ற தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகினர்.

எறிகணைத் தாக்குதலிலேயே அவர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இத் தாக்குதலில் மேலும் ஐந்து இராணுவத்தினர் படுகாயமடைந்ததாக இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை திருகோணமலை விடுதலைப்புலிகளின் பகுதி மீது இராணுவத்தினரால் எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மூதூரில் இருந்தும் திருகோணமலையிலிருந்தும் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்ததாகவும் பொது மக்கள் ஐவர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க திருகோணமலை மூதூர் இறங்குதுறையில் உள்ள கடற்படைத் தளம் மீது நேற்று துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இத் துப்பாக்கிச் சூட்டில் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

மூதூர் இறங்குதுறைத் தளத்தில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் இருவர் மீது நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.20 மணிக்கு இத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## தயா மாஸ்டரைக் கைது செய்யுமாறு பொலிஸ் தலைமையகத்தில் முறையீடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டரை கைது செய்யுமாறு பயங்கரவாதத்திற்கு எதிரானதேசிய இயக்கம் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இலங்கை நீதிமன்றத்தில் 200 வருட சிறைத்தண்டனையைப் பெற்றுள்ளார்.

அவருடைய அமைப்பின் உறுப்பினரே தயா மாஸ்டர். கொழும்பில் இருப்பதாகக் கூறப்படும் தாக்குதலுக்கான 8 மோட்டார் சைக்கிளில்கள் தொடர்பில் பொலிஸார் பொது மக்களின் உதவியை கோரியுள்ளார்கள்.

இந்த நிலையில் தயா மாஸ்டரை கைது செய்தால் அந்தத் தகவலைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்









நேற்று நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற 'ஒவ்வொரு சிறாருக்கும் ஓர் ஆசிரியர் தேவை' என்ற பிரசுர வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம், மனித நேய அமைப்புகள் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதன், யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் அ.சிவசுப்பிரமணியம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் முன்னாள் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி ஆசிஉரையாற்றுவதையும், பிரசுரத்தின் சிறப்புப் பிரதியை பிரதமவிருந்தினரிடமிருந்து பொது நலவாய கல்வி நிதியத்தின் மாகாண இணைப்பாளர் வி.ஸ்ரீ சக்திவேல் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-திலீவின்பன்)

# மணிபாகவரது ஒலிநாடாக்களை வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இளைய தலைமுறையினரிடையே சமய அறிவினையும், இறை பக்தியையும், ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்வதை தனது பிரதான குறிக்கோளாகக் கொண்டியங்கும் யாழ்ப்பாணம் மாநாகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவானது அதனை எய்தும் பொருட்டு நல்லைக் கந்தனின் வருடாந்த மஹோற்சவ காலங்களில் ஆறுமுக நாவலரது வழி வந்த கதாப்பிர சங்கியான வண்ணை சி. எஸ். எஸ்.மணிபாகவரது (நல்லைக் குருமணி) புராண இதிகாசப் பிரசங்கங்களை நவீன முறையில் ஒலிநாடாவாக்கி ஒலிபரப்ப திருவருள் கூடியுள்ளதால் மேற்படி ஒலிநாடாக்களை வைத்திருக்கும் அடியார்கள் அவற்றை தமக்கு இரவலாக வழங்கி தமது பணி சிறக்க ஒத்துழைப்பு நல்குமாறு சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும் யாழ்.மாநாகராட்சி ஆணையாளருமான சீ.வீ. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# அரச பயங்கரவாதமும் தமிழர் அபிலாஷையும் பிரி.அரசதரப்பினருக்கு கூட்டமைப்பு விளக்கம்

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும். சிறிலங்கா அரச பயங்கரவாதம் சம்பந்தமாகவும் பிரித்தானிய அரச தரப்பினரை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சந்தித்து விளக்கம் அளித்துள்ளனர்.

ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்புக்குழு நேற்று முன்தினம் பிரித்தானிய அபிவிருத்தி அமைச்சர் கரத்தோமஸ், வெளியுறவு அமைச்சின் சிறப்பு பிரதிநிதி சைமன்பெரி, நாடாளுமன்ற உறுப்பினர் பிட்ஸ் வோல்வ் ஆகியோரை சந்தித்து விளக்கி கூறியுள்ளனர்.

சிறிலங்கா படைகள் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு வன்முறைகள் குறித்தும் தமிழ் மக்கள்விரும்பும் அரசியல் தீர்வு குறித்தும் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா கடற்படைக்கு பிரித் தானிய கடற்படை பயிற்சி அளிக்க முன்வந்தமைக்கு தமது அதிருப்தியை தெரிவித்த கூட்டமைப்பினர் தமிழ் மக்களை படுகொலைசெய்யும் கடற்படைக்கு பயிற்சி அளிப்பது நியாயம் அற்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவகால தற்காலிக கடைகள் குத்தகை வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2006

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தில் தற்காலிகக் கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எதிர்வரும் 27.07.2006ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஐஸ்கிறீம் கடைகளுக்கு மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 10000/-வும் ஏனைய கடைகளுக்கு ரூபா 2000/-வும் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 300/- (வற்வரி நீங்கலாக) கட்டி பற்றுச்சீட்டைப் பெற்று விண்ணப்பப்படிவத்தை மாநகராட்சிமன்ற நானாவித இறைவரிப்பகுதியில் 27.07.2006ஆம் திகதி காலை 10.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் யாவையும் இவ் வலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியில் உரியநேரத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் எதிர்வரும் 27.07.2006 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு ஆணையாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். சித்திபெற்றவர் கேள்வித்தொகையை முழுமையாகச் செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிட்டுக்கொள்ளலாம்.

*குறிப்பு:-* சபையினால் வழங்கப்பட்ட கடைகள் தவிர வேறு கடைகள் கோயில் சுற்றாடலில் திருவிழாக் காலத்தில் திறந்து நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

சீ.வி.கே.சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/403)

# இதய அஞ்சலி

09 04 1960 — 12 07 2006



## தோழர் ராஜன், வோல்டர்

(செபஸ்டியன் இருதயராஜன்)
புளொட் யாழ்.மாவட்ட அமைப்பாளர்
முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினர்
மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்

கிளிநொச்சி உருத்திரபுரத்தை சொந்த இடமாகக் கொண்ட தோழர் ராஜன் தனது இளம் வயதிலிருந்தே புளொட் அமைப்பின் பல்வேறு முன்னணி அமைப்புக்களூடாகவும் பல்வேறு துன்ப, துயரங்களை சுமந்துகொண்டு தமிழ் பேசும் மக்களின் அரசியல் சமூக பொருளாதார விடுதலை பற்றிய நம்பிக்கைகளுடன் தொடர்ந்து உழைத்தவர். தமிழர் போராட்டம் தொடர்பான தெளிவும், அனுபவமும் மிக்க தோழர் ராஜனின் இழப்பு தமிழ் சமூகத்திற்கு பெரும் இழப்பாகும். ஜனநாயகம், மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்று கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் வலியுறுத்தி வந்த அவரது இழப்பு, ஜனநாயகம் மனித உரிமைகளை நேசிக்கும். அதற்காகக் குரல்கொடுக்கும் அனைவருக்கும் மிகப்பெரும் இழப்பாகும்.

அவரது குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்த கட்சி தோழர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது பிரிவால் துயரடைந்திருக்கும் அனைவருடனும் எமது அனுதாபங்களை பகிர்ந்து கொள்கிறோம். தோழர் ராஜனுக்கு எமது இதயபூர்வமான அஞ்சலியை உரித்தாக்குகின்றோம்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா)

# நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ ஏற்பாடுகள்

(நல்லூர்)

இந்தமாதக் கடைசியில் ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ ஏற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல் கடந்த மாதம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதி அலுவலகத்தில் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றபோது பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

*திருவிழாக் காலத்தில் இம்முறையும் காவல்துறையினரின் சேவையை பெற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லாததால் கடந்த காலத்தில் அவர்கள் இல்லாமலே திருவிழாவை ஒழுங்காக நடத்தியது போல இம்முறையும் நடாத்துதல்.

*கொடியேற்றத்துக்கு முன்னரே வீதிகளில் மணலைப் பறித்து பரவி பக்தர்கள் அங்கப்பிரதிஷ்டை செய்வதற்கு வழி செய்தல்.

*திருவிழா ஆரம்பமாவதற்கு முன்னரே ஆலய சூழலில் காணப்படும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்தல்.

*தடைமுகாமுக்குள் தமது வாகனங்களை எடுத்துவர வேண்டாமென பொலிஸ் மற்றும் இராணுவ தலைமையைக் கோருவது.

*உற்சவ காலத்தில் ஆலயத்தை அண்டிய பகுதிகளில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது வாகனங்களை ஆலய வீதிக்குள் வராதவாறு மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுதல்.

*ஆலய சூழலில் மேலதிக மின் விளக்குகளைப் பொருத்துவதுடன் மின்சாரம் தடைப்படும் நேரங்களில் மின்சாரம் வழங்குவதற்கு மின் பிறப்பாக்கிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

*அம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு வாகனங்களை எந்நேரமும் தயார் நிலையில் வைத்திருத்தல்.

*சகல தடை முகாம்களும் அதிகாலை 4.30 மணிக்குத் திறக்கப்படுவதை உறுதி செய்தல் போன்ற முடிவுகள் அக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (து-133)

# 59ஆவது ஆண்டு நிறைவையொட்டிய விளையாட்டுப் போட்டிகள்

(கோண்டாவில்)

அராலி களவத்துறை விளையாட்டுக் கழகத்தின் 59ஆவது ஆண்டு நிறைவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக அணிக்கு 7பேர் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை (ஆடிப்பிறப்பன்று) மேற்படி கழகத்தின் விளையாட்டு மைதானத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகமும் சங்கானை இந்து இளைஞர் மன்றமும் மோதுகின்றன. தொடர்ந்து நல்லூர் பிரதேச சபை துடுப்பாட்ட அணிக்கும் அராலி களவத்துறை அணிக்கும் இடையிலான சினேகபூர்வமான போட்டியும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுக்களும் ஆடிப்பிறப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக கழகத்தலைவர் ம.குகராஜன் தெரிவித்துள்ளார். (து-36)

# அரிசி உற்பத்திக் கிராமங்களை நிறுவ கமத்தொழில் அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

நெல் உற்பத்தியில் நாடு தன்னிறைவு கண்டுள்ளதால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் அரிசி உற்பத்திக் கிராமங்களை நிறுவுவதற்கு கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ் அரிசி உற்பத்திக் கிராமங்களை நிறுவுவதன் மூலம் குறித்த பிரதேசங்களிலுள்ளோருக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதுடன் தரமான அரிசியை உற்பத்தி செய்ய முடியுமென்றும் கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் நிர்வகிக்கப்படவுள்ள இந்த அரிசி உற்பத்திக் கிராமங்கள் மூலம் குறைந்த விலையில் தரம்மிக்க அரிசியை உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ் அரிசி உற்பத்திக் கிராமங்களை நிறுவுவதற்கான ஆய்வுகளை ஹெக்டர்கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இந்த நிறுவனத்தின் விவசாய, சுற்றாடல் வள முகாமைத்துவப் பிரிவு இத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகிறது.

ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மூலம் குறைந்த விலையில் நெல் உற்பத்தியை மேற்கொண்டு குறைந்த விலையில் அரிசியையும் உற்பத்தி செய்வதன் மூலம் பாவனையாளர்களுக்கு நன்மை கிடைக்குமென்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (த-9)

# வறுமையை ஒழிப்பதற்கு பல்வேறு திட்டங்கள் சமூக சேவைகள் அமைச்சின் நடவடிக்கை

(கொழும்பு)

சிறையிலுள்ளோர், புத்தி சுவாதீனமற்றோர் மற்றும் குடிப்பழக்கத்திற்கு அடிமையானோரின் குடும்பங்களின் வறுமை நிலையை ஒழித்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகப் பாரிய திட்டமொன்றை அமுல்படுத்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு தயாராகியுள்ளது.

இதற்கென நாடளாவிய ரீதியில் கணக்கெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் விஜி ஜெகராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வறுமையை ஒழிப்பதற்காக சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

'சிறையிலுள்ளோர், புத்தி சுவாதீனமற்றோர் மற்றும் குடிப்பழக்கத்திற்கு அடிமையானோர் ஆகியோரின் குடும்பங்களே வறுமை நிலைக்குத்தள்ளப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. எனவே தான் இதற்கு தீர்வு காண்பது குறித்து துரித நடவடிக்கை எடுத்து வருகின்றோம்' எனவும் அவர் தெரிவித்தார்.

வீட்டுத் தலைவர், சிறைக் கைதிகளாக இருக்கும் பட்சத்தில் அவர்களுடைய குடும்பம் பாரிய வறுமை நிலைக்கு தள்ளப்படுகின்றது.

நாடளாவிய ரீதியிலுள்ள இத்தகைய குடும்பங்களின் எண்ணிக்கையை கணக்கெடுப்பதற்கு சிறைச்சாலை ஆணையாளர் அமைச்சுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புத்தி சுவாதீனமற்றோர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் பெண்கள். இவர்கள் வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் போது சமூகம் அவர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் தள்ளி வைக்கின்றது.

இந்த நிலையில் மாற்றங்களை கொண்டு வருவதற்காகவும் கணக்கெடுப்புகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் குடிப்பழக்கத்துக்குஅடிமையானவர்கள், மனைவி வெளிநாட்டுக்கு சென்ற பின்னர் பிள்ளைகளை தனியாக பராமரித்து வருவோர் போன்ற விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன.

இவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் பாலியல் வன்முறைகளில் இருந்து பிள்ளைகளை பாதுகாத்துக்கொள்ள முடியுமெனவும் அமைச்சின் செயலாளர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (து-9)

# பரீட்சார்த்த வயல்விழா விவசாய திணைக்களத்தின் நடவடிக்கை

உரும்பிராய் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் வெங்காய இலைச்சுருள் கூட்டுநோய் செயல் விளக்கத் துண்டத்தின் வயல் விழா கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இலைச்சுருள் கூட்டுநோயால் பாதிப்படைந்த வெங்காயத்தின் நோய் தீர்க்கும் முறைகளை ஒரு விவசாயியின் காணித் துண்டில் பிரயோகம் செய்து அந்த முறைகளினால் ஏற்படும் அனுகூலங்களை அந்த விவசாயியைக் கொண்டு ஏனைய விவசாயிகளுக்குக் கூறவைக்கும் நிகழ்வே வயல்விழா எனப்படுகின்றது.

வெங்காய இலைச்சுருள் கூட்டுநோய் செயல் விளக்கத் துண்ட வயல் விழாவில் கோப்பாய் பிரதேச செயலர் சி.மோகன்ராஜ், பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், விவசாய உத்தியோகத்தர் கே.சிறிபாலசுந்தரம் உட்பட மற்றும் பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்கள், அப்பகுதி கிராம சேவையாளர், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேபோன்ற ஒரு வயல்விழா புத்தூர் விவசாயப் போதனாசிரியர் பிரிவின் சிறுப்பிட்டி மேற்கில் வதியும் எஸ்.கந்தையாவின் தோட்டத்தில் கடந்த 12ஆம் திகதி புதன் கிழமை நடைபெற்றது.

இவ்விழாவில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். (து-36)

# நகைத் திருடர்களுக்கு 2 ஆண்டு கடூழியச் சிறை

குருநகர் பகுதியில் கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி நடந்த 2 இலட்சத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைத் திருட்டுடன் சம்பந்தப்பட்ட மூவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

வீரசிங்கம் வீதி, திருநகரைச் சேர்ந்த அன்ரனி ஸ்டாலின், தோமஸ் சுமன், சிறில் துதிஸ் ஆகிய மூவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவார்கள்.

இவர்கள் கடந்த 29ஆம் திகதி யாழ். நீதிமன்றில் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து இவர்களது வழக்கு நேற்றுமுன்தினம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 2 இலட்சத்து 23ஆயிரம் பெறுமதியான முழு நகைகளும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் இவர்கள் மூவருக்கும் தலா 2 வருட கடூழிய சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தண்டப்பணத்தைச் செலுத்தத் தவறின் ஒரு வருட சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

இவர்கள் மூவரும் திருடிய நகைகளை விற்பனை செய்வதற்காக நகைக் கடையொன்றுக்குச் சென்ற சமயமே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிகிறது. (து-133)

# இளம் வணிக முகாமைத்துவம் 2005 பரீட்சை முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட இளம் வணிக முகாமைத்துவம் - 2005 பரீட்சையில் சித்தியடைந்த (மீள் பரீட்சார்த்திகள்) விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

**இளம் வணிக முகாமைத்துவம் - 2005 பரீட்சை முடிவு**

சித்தியடைந்தோர்:

எம்.விஜயகுமார், என்.நந்தகுமார், செல்வி ஜெ.நீலாம்பிகை, ரீ.பகீரதன், ரஞ்ஜிதகுமார், ஆர்.விஜிந்திரன், என்.சதீஸ்குமார்.

**இளம் வர்த்தகமாணி - 2005 பரீட்சை (மீள் பரீட்சார்த்திகள்) முடிவுகள்**

சித்தியடைந்தோர்:

எம்.ஆரூரன், பி.பாஸ்கரன், என்.தனரூபன், கே.அஜந்தன், செல்வி ரி.சைலஜா, பி.பபியன் பிகுராடோ, பி.பரமசிகாமணி. (து-133)

# 3 அமைச்சுப் பொறுப்புக்களை எதிர்பார்க்கிறது இ.தொ.கா

(கொழும்பு)

அரசாங்கத்தில் 3 அமைச்சுப் பொறுப்புகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்பார்ப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இல்ங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் ஆர்.யோகராஜன் இதனைத் தெரிவித்துள்ளார். அமைதி முயற்சிகள், இந்திய வம்சாவழித் தமிழர்களின் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காக அரசாங்கத்தை ஆதரிக்க முடிவு செய்துள்ளோம் என்றார் யோகராஜன்.

ஜனாதிபதி மற்றும் காபினட் அமைச்சர்களுடன் பல சுற்று ஆலோசனைகளை நடத்திய பின்னரே அரசாங்கத்தை ஆதரிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது என்றும், என்ன என்ன அமைச்சுப் பொறுப்புகளை இ.தொ.கா விரும்புகிறது என்பது குறித்த பேச்சுக்கள் மஹிந்தவுடன் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (து)

# சர்வதேசத்தை ஏமாற்றுகிறது அரசு

## தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப்பாளர்

(மட்டக்களப்பு)

தமிழர் தாயகத்தில் விடுதலைப் போராட்டம் புதிய பரிணாமம் பெற்றுள்ளது என மாவட்ட தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் எஸ்.தாயகன் தெரிவித்தார்.

மட்டு அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தமிழ் மக்கள் அனைவரும் கிராமிய படையணி, எல்லைப் படையணி என் விடுதலையை வென்றெடுப்பதற்காக படையணிகளாக மாறிக்கொண்டு வருகின்றார்கள். இந்நிலைய்யில் அரசு தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி கொலை செய்து அச்சுறுத்தி வருகின்றதோடு விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி சர்வதேசத்தை ஏமாற்ற சர்வகட்சி மாநாட்டை கூட்டி உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிட்டு வருகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் சரியாகப் பேணப்பட வேண்டும் என ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இங்கு அவசரகாலச் சட்டத்தை நீடித்து நிழல் யுத்தத்தினை நடாத்துவது மஹிந்தவின் சதி நடவடிக்கையாகும் என்றார்.

பாடசாலை அதிபர் எஸ்.அலோசியஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பட்டிப்பளை கோட்டக்கல்வி பணிப்பாளர் தயாசீலன், ஆசிரியர் ஆலோசகர் மாணிக்கப்போடி மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (து)

## இன்று ஒரு தகவல்

# ஆளுமைக் கோளாறுகள்

ஒருவன் எப்படி நடந்துகொள்ளுகின்றான் என்பதை வைத்துத்தான் அந்த ஆள் எப்படி என்பதை நாம் முடிவு செய்கின்றோம். ஆளுமை என்று சொல்கிறோமே அதற்கு சூழ்நிலைகளை ஆழ்கின்ற தன்மை என்று விளக்கம் கொடுக்கின்றார் ஒரு உளவியல் நிபுணர்.

சரி ஒரு மனிதனுடைய ஆளுமையை உருவாக்கும் விடயங்கள் எவை? பிறப்பு, வளர்க்கப்படும் விதம், படிப்பு, நண்பர்கள், சமுதாயம் என நிறைய உண்டு. ஆளுமையின் அடிப்படையில் சில மனநோய்கள் உண்டாகின்றன. அவைகளைப் பற்றித் தெரிந்துகொண்டோமானால் நம்முடன் இருப்பவர்களை அடையாளம் கண்டுகொள்ள அது உதவியாக இருக்கும்.

பரனாய்டு ஆளுமை என்று ஒன்று. இந்தக் கோளாறு உள்ளவர்கள் எப்படி இருப்பார்கள் தெரியுமா? அதிக உணாச்சி, சந்தேகம், பொறாமை போன்றன அதிகம் இருக்கும். வளைந்து கொடுக்கமாட்டார்கள். அடுத்தவர்களோடு இணக்கமான உறவு இருக்காது. அவர்கள் செய்யும் தவறுகளுக்கு அடுத்தவர்களைக் குறை கூறிக் கொண்டிருப்பார்கள் இது ஒரு ரகம்.

அடுத்தது ஸ்கிசாய்டு ஆளுமை. இந்தக் கோளாறு உள்ளவர்கள் அடுத்தவர்களுடன் பழகக் கூச்சப்படுவார்கள். சிறுவயது முதலே இது ஆரம்பமாகிவிடும். பகல் கனவில் சஞ்சரிப்பார்கள். அவர்களது விரோதம், கோபம் போன்றவற்றைக் கூட வெளியே காட்டமுடியாது இருப்பார்கள். பிரச்சினையிலிருந்து ஒதுங்கி எதிலும் ஈடுபாடு இல்லாதவர்களாக இருப்பார்கள்.

அடுத்து சைக்லோ தைமிக் ஆளுமை. உணர்ச்சிகளில் ஏற்றத்தாழ்வு அதிகமாக இருக்கும். சில சமயங்களில் சோகமாக இருப்பார்கள். அந்த சமயத்திற் கேற்றாற்போல் சமூக நிகழ்வுகளில் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

இன்னொரு வகை எண்ணப்பீடிகை ஆளுமை. இவர்களுக்கு எல்லாம் சரியாக இருக்கவேண்டும். சட்ட திட்டம் எதிலும் ஒரு ஒழுங்கு முறை. இப்படி எதிர்பார்க்கும் மனோபாவம் இவர்களது எதிர்பார்ப்புக்கும் வரைமுறைகளுக்கும் மற்றவர்கள் கட்டுப்படவேண்டும் என்று நினைப்பார்கள். இந்த நிலை நீடித்தால் என்ன ஆகும் தெரியுமா? அலைக்கழிக்கும் எண்ணங்கள் திரும்பத் திரும்ப ஒரே செயலை செய்யத்தூண்டும். மனத்தளர்ச்சிக்கு ஆளாகி விடுவார்கள்.

அடுத்தது ஹிஸ்டீரியா ஆளுமை. சிறு விஷயங்களை பெரிதுபடுத்தி நாடகமாடும் நடிகர்கள், இவர்கள் உணர்ச்சி அதிகம் உள்ளவர்கள். இவர்களது மன எழுச்சியால் பக்குவமின்மை, குழந்தைத்தனம், முதிர்ச்சியின்மை எல்லாம் இருக்கும். தன்னலமிக்க குணம். பிறர் தன்னை மட்டுமே கவனிக்கவேண்டும் என்று நினைத்துச் செயற்படுவார்கள்.

அடுத்த ரகம் வளர்ச்சி அற்ற ஆளுமை. அடுத்தவர்களுடன் இணங்கிப்போக முடியாதவர்கள். அறிவு மனவெழுச்சி, சமூக உறவு இவற்றில் போதுமான வளர்ச்சியையும் நிறைவையும் பெற முடியாதவர்கள். இவர்களால் வாழ்வில் முன்னேற முடியாது. பிச்சைக்காரர்கள், குற்றவாளிகள் போன்றோரிடம் இதுபோன்ற ஆளுமை அதிகமாக இருக்குமாம்.

அடுத்தது சோர்வுடைய ஆளுமை. எதிலும் உற்சாகம் இல்லாமல் சோர்ந்துபோய் அதற்கு நமக்கு வலிமை இல்லை என்று கூறுவார்கள். சிறு விடயங்களுக்கு அதிர்ச்சி அடைவார்கள. வாழ்வின் சுவையை அனுபவிக்க முடியாதவர்கள்.

இன்னொரு ரகம் கொதித்தெழும் ஆளுமை. எதற்கெடுத்தாலும் ஆத்திரம், குரோதம், வன்செயல் இவற்றில் ஈடுபாடு உள்ளவர்கள். நத்தை வகை ஆளுமை என ஒன்று. அடுத்தவர்கள் மீது விரோதம் இருக்கும். அடிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். ஆனால் அதை அப்படியே வெளிக்காட்டாமல் அதே சமயம் அமைதியான முறையில் வெறுப்பை வெளிக்காட்டும் ரகம் இவர்கள். பேசாமல் இருந்துகொண்டே நினைத்ததைச் சாதிப்பார்கள். முன் ஜாக்கிரதை ஆளுமை ஒரு ரகம். பாதுகாப்பின்மை, சந்தேகம், முழுமையின்மை, அரைவேக்காட்டுத்தனம் இப்படியான மனப்போக்கு அதிகமாக இருப்பதனால் அகம்பாவம், பிடிவாதம்,எச்சரிக்கை யாவும் அளவுக்கு மீறியிருக்கும்.

இதுவரை நாம் பேசிக் கொண்டிருந்த ஆளுமைப் பண்புகள் அதிகமாகிவிட்டால் ஆளுமைக்கோளாறுகள் ஏற்படும். அதனடிப்படையில் மன வியாதிகள் ஏற்படும். ஒருவர் ஒரு மனோதத்துவ டாக்டரைத் தேடிவந்தார். "டாக்டர் எனக்கு மனதில் ஏதோ வியாதி ஆளுமைக் கோளாறு. அதாவது எனக்கு விரைவில் இறந்துவிட்டால் நல்லது எனத் தோன்றுகின்றது" என்றார். உடனே அந்த டாக்டர் "சரி... அப்படி என்றால் இங்கேயே இருங்கள்.நான் வைத்தியம் செய்கின்றேன்"என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நாட்டின் எதிர்காலம் குறித்து ஜனாதிபதி சிந்திக்கவேண்டும்



## ஐ.தே.க அறிக்கை

(கொழும்பு)

டோக்கியோ பிரகடனத்தின் அடிப்படையில் நாட்டின் இறைமையை பாதுகாக்கும் வகையில் எடுக்கப்படுகின்ற இறுதித்தீர்வுக்கு பூரண ஆதரவு வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

இதுகுறித்து நேற்று முன்தினம் ஐ.தே.க.விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதய சுத்தியுடன் செயற்படுவதுடன் நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து செயற்படவேண்டும் . எமது ஆதரவைப் பயன்படுத்தி அதிகாரத்தை தக்க வைத்துக் கொண்டு அதிகார அரசியல் நடத்தக் கூடாது .

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதில் மிகவும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. அந்த முனைப்பு யுத்தத்தை நோக்கி நகர்வதாக இருக்கக்கூடாது, நாட்டிற்கு சமாதானத்தைக் கொண்டு வந்த கட்சி என்ற வகையில் சர்வகட்சி மாநாட்டில் பங்கு பற்றி வருகின்றோம்.

இனப் பிரச்சினைக்கு சர்தேச சமூகத்துடன் இணைந்து அரசியல் தீர்வுக்கான யோசனை முன்வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அரசாங்கம் தனது பயணத்தை மீண்டும் ஆரம்ப கட்டத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது.

அதனால்த்தான் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட புத்திஜீவிகள் குழுவில் நாம் பங்கேற்கவில்லை.வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்பதில் ஐ.தே.க உறுதியாக இருந்ததுடன் அதற்காக எதிர்காலத்திலும் செயல்படும். இதனை பயன்படுத்தி அரசாங்கம் மனித படுகொலைகளை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அரசாங்கம் ஐ.தே.கவை சின்னாபின்னமாக்க முயற்சிக்கின்றது . ஜனாதிபதியும் அதே பாதையிலேயே பயணிக்கின்றார். இதுவா மஹிந்த சிந்தனை? சமாதானம் ஒருபுறமிருக்கநாட்டின் நிர்வாகத்தை ஊழல் அற்ற நிர்வாகமாகக் கொண்டு நடத்துவதற்கும் மஹிந்த சிந்தனையை சிந்தனை வடிவில் இல்லாது செயற்படுத்தவேண்டும். (து)

## பாதுகாப்புத்தேடி

# வன்னிசெல்ல வேண்டிய நிலையில் தோட்டத்தொழிலாளர்கள் உள்ளனர்

## மனோ கணேசன் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இரத்தினபுரி, களுத்துறை மாவட்ட தோட்டத் தொழிலாளர்கள் பாதுகாப்புத்தேடி வன்னிக்கு சென்று குடியேற நேரிடுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

போருக்கு எதிரான முன்னணியால் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் ஒன்றின் போது இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

தென்னிலங்கையில் வாழும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்று உயிர் அச்சம் ஏற்பட்டுள்ளது. இரத்தினபுரி பம்பேகமுவ தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவம் இதற்கு உதாரணம் என மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

வடக்கு- கிழக்கில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளுக்கு பதிலாக தென்னிலங்கையில் தோட்டத் தொழிலாளர்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகிறார்கள்.

வடக்கு-கிழக்கின் தமிழ்த்தேசியப் போராட்டத்திற்கும் தெற்கின் பௌத்த அடிப்படைவாதத்திற்கும் இடையில் தோட்டத் தொழிலாளர்கள் சிக்கியுள்ளார்கள்.

குறிப்பாக இரத்தினபுரி, களுத்துறை கேகாலை, ஆகிய மாவட்டங்களின் தோட்டத் தொழிலாளர்களும் கம்பஹா, புத்தளம், காலி ஆகிய ஒதுக்குப்புற மாவட்டங்களில் வாழும் தமிழ்மக்கள் தொடர்ச்சியாக பேரினவாத தாக்குதல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே இவர்கள் தாக்கப்படுவதாக அவர்குறிப்பிட்டார். இந்த நாட்டை கடந்த 200 வருடங்களாக வாழவைத்துக் கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சிங்கள தேசம் வழங்கி வரும் வெகுமதி இவ்வாறான வன்முறைகள் மாத்திரமே எனவும் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார். (து)

# ஜோசப் எம்.பியை கொலை செய்தோர் குறித்து சில நாட்களில் தகவல் தருவோம்

## பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தை படுகொலை செய்தவர்கள் குறித்த தகவல்கள் சில நாட்களில் வெளியாகவுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவின் பிரதிமா அதிபர் அசோக விஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கடந்த புதன்கிழமை ஊடகவியலாளரிடம் அவர் கூறுகையில், குருவிட்ட சிறைச் சம்பவத் தில் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதுவிததொடர்பும் இல்லை. இது சிறைத்துறை அதிகாரிகள் மீது குற்றம்சாட்டப்பட் டுள்ளது.

இது தொடர்பாக நீதித்துறை அமைச்சு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. அந்த விசாரணை அறிக்கை விரைவில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும். பிரச்சினைக்குரிய பகுதிகளில் காணாமல் போனோர் தொடர்பாக 3 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இவர்களில் 200பேர் குற்றவாளிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் எதிர்வரும் சில நாட்களில் குற்றவாளிகள் தொடர்பான செய்திகள் வெளியாகும். அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவர் என்றார். (து)

# நடந்த சம்பவத்தை எவ்வாறு மறக்க முடியும்? செய்தி ஸ்தாபனத்துக்கு வயோதிபர் பேட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள அல்லைப்பிட்டிக் கிராமம் இன்னும் வழமை நிலைக்கு திரும்பவில்லை என்று ஈ.என்.ஐ செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 13ஆம் திகதி அல்லைப்பிட்டிக் கிராமத்தில் இடம்பெற்ற பொதுமக்கள் மீதான தாக்குதலையடுத்து இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் பீதி நிலையில் இருந்து வருகின்றனர்.

அல்லைப்பிட்டி சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் கொலைசெய்யப்பட்டனர் . எனினும் இந்தக் கொலைகளுக்கு பொறுப்பானவர்கள் இன்னும் சட்டத்திற்கு முன் நிறுத்தப்படவில்லை என்று குறித்த செய்தி ஸ்தாபனம் சுட்டிக் காட்டியுள்ளது.

நடந்த சம்பவத்தை தம்மால் ஒரு போதும் மறக்க முடியாது என்று வயோதிபர் ஒருவரின் கருத்தை ஈ.என்.ஐ செய்தி ஸ்தாபனத்தின் செய்தியாளர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமது கிராமத்தில் குறித்த கொலைகளை செய்தவர்கள் யார் ? ஏன் அதனை செய்தார்கள்? என்ற செய்திகள் வெளி வராத நிலையில் தாம் எவ்வாறு சொந்த இருப்பிடங்களுக்கு திரும்ப முடியுமென்றும் தற்போதும் இடம்பெயர்ந்த நிலையிலுள்ள வயோதிபர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இச் சம்பவத்தையடுத்து அல்லைப்பிட்டியிலிருந்து சுமார் 350 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன .

இதேவேளை, இவர்களில் கணிசமானோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உறுதி மொழியினையடுத்து கடந்த யூன் மாதம் இறுதிப் பகுதியில் தமது இருப்பிடங்களிற்கு திரும்பியுள்ளனர் என்ற தகவலையும் அந்த செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது. (து-9)

# மொழி பெயர்ப்பாளர் பற்றாக்குறையை நீக்க தொடர்பாடல் உதவியாளர்கள் நியமனம்

அரச நிறுவனங்களில் நிலவும் மொழி பெயர்ப்பாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டு அரசாங்க நிறுவனங்களில் தொடர்பாடல் உதவியாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக 487பேர் தொடர்பாடல் உதவியாளர்களாக பெருந்தோட்டத்துறை உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த 487 தொடர்பாடல் உதவியாளர்களும் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், தபால் அலுவலகங்கள், வைத்திய சாலைகள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் நியமிக்கப்படவுள்ளனர்.

மொழி பெயர்ப்பாளர்கள் இல்லாமையானது குறிப்பாக பெருந்தோட்டத்துறை அரச காரியாலயங்களில் நிலவும் மிகப்பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது. இதனால் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள தொடர்பாடல் உதவியாளர்கள் இப்பிரதேச அரச காரியாலயங்களில் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திறைசேரி501தொடர்பாடல் உதவியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கியிருந்த போதிலும் நேர்முகப் பரீட்சையின் போது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பேசவும் எழுதவும் திறமையுடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட 487 பேருக்கே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இவற்றில் 96 சிங்களவர்களும் 319 தமிழர்களும் 72 முஸ்லிம்களும் அடங்குவர். (த-7)

# இலங்கை பொலிஸில் புலி உளவாளிகள் விசாரணை நடைபெறுவதாக அறிவிப்பு

பொலிஸ் பிரிவில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் உளவாளிகள் குறித்து விசாரணைகள் நடத்தப்படுவதாக பொலிஸ் அதிகாரி ரியன்சி பெரேரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகவியலாளர்களிடம் கூறுகையில், பொலிஸ் பிரிவில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையோர் குறித்து உறுதியான ஆவணங்கள் இல்லை. இருப்பினும் இது குறித்து விசாரணைகளை நடத்த பிரதி பொலிஸ் மா அதிபர் விக்ரர் பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் பிரிவிற்குள் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஊடுருவ முடியாது. ஏனெனில் பொலிஸில் விண்ணப்பிக்கும் நபர்களின் நான்கு தலைமுறையினர் குறித்த விசாரணைகளை நடத்திய பின்னர் தான் அவர்களை சேர்த்துக் கொள்கிறோம். இருப்பினும் ஊடுருவுவதற்கு சில வாய்ப்புக்கள் உள்ளன. ஆதலால் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

வடமேல் மாகாணத்தில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் தன்னை சிங்களவர் என்று கூறி ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளார். அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றார். (த)

# அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்றுங்கள்! சோனியா காந்திக்கு உருக்கமான வேண்டுகோள்

இலங்கைப் பிரச்சினையில் தீவிரவாதிகளை புறக்கணித்து அங்குள்ள அப்பாவித்தமிழர்களை நினைவில் கொண்டு அவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கு தமிழ்நாடு காங்கிரஸின் ஆசிரியர் பிரிவுத் தலைவர் ஆர்.ராஜமோகன் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில், இந்திரா காந்தியை சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த இருவர் சுட்டுக்கொன்ற போது அச்சமூகத்தினருக்கு எதிராக நாடே கொதித்து எழுந்தது. காலம் செல்லச் செல்ல சூழ்நிலை மாறி, அச்சமூகத்தினருடன் இணக்கமாக வாழும் நிலை உருவாகியது.

தாங்களோ சமூகத்தைச் சார்ந்தவரையே பிரதமர் ஆக்கி தங்களது மனித நேயத்தையும் தியாக உணர்வையும் வெளிப்படுத்தியுள்ளீர்கள். ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நாம் எவரும் இறக்கும்வரை மறக்க முடியாது. அதே நேரத்தில் தற்போது இலங்கையில் அப்பா வித் தமிழ் மக்கள் நாள்தோறும் ஈவிரக்கம் இன்றிக் கொல்லப்படுகின்றனர். இதை நாம் வேடிக்கை பார்ப்பது சரியாக இருக்குமா? சீக்கியர்கள் விவகாரத்தில் கையாண்ட அணுகுமுறையை இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் கடைபிடித்து அப்பாவித் தமிழர்களை காப்பாற்ற வேண்டும். மத்திய அரசின் மூலம் இதற்கான தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து-7)

# அனர்த்த முகாமைத்துவக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுக்கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப2மணிக்குயாழ்.மாவட்ட செயலக மண்டபத்தில் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்துப் பிரதேச செயலர்களும் அரச சார்பற்றநிறுவணங்களும், உள்ளூராட்சித் திணைக்களங்களும், சுகாதார திணைக்களங்களும், மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் கலந்து கொள்ளவுள்ள தாக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார். (து-133)

# தமிழகம் சென்றபோது கைதான அகதிகளை சொந்த இடங்களுக்கு அனுப்புமாறு உத்தரவு

(தலைமன்னார்)

தலைமன்னார் பாக்கு நீர் கடல்வழியாக தமிழ்நாட்டுக்கு செல்ல முற்பட்டவேளையில் கடந்த திங்கட்கிழமை கடற்படை



யினரால் கைதுசெய்யப்பட்ட 23 அகதிகளையும் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் ஜே.பிரபாகரன் உத்தரவிட்டதுடன் இரு படகோட்டிகளையும் எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறும் பணித்துள்ளார்.

மன்னார் பொலிஸாரினால் அகதிகள் 23பேரும். படகோட்டிகள் இருவரும் மன்றில் ஆஜராக்கப்பட்டபோதே நீதிவான் இந்த உத்தரவினை விடுத்துள்ளார். கைதான அகதிகள் 23பேரும் திருகோணமலை கட்டாஸ்பத்திரி சாந்திபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை இந்தியாவுக்கு செல்ல முயன்றபோது கடந்த புதன்கிழமை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 17 பேர் மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரணிடிமெல்லிடம் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர். இந்த 17 பேரையும் பேசாலை திறந்த அகதி முகாமில் தங்கவைப் பதற்கு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். (து)

# இராசிபலன்

**15.07.2006**

**(ஆனி 31, சனிக்கிழமை)**

**பஞ்சமி பின்னிரவு 1.07 மணிவரை**

**சதயம் காலை 7.52 மணிவரை**

**இராகுகாலம் 9.00-10.30மணிவரை**

**சுபநேரம் 3.00-4.30 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | குடும்ப சுகம், கலந்துரையாடல், முயற்சி கைகூடும், கீர்த்தி. |
| இடபம் | கடின உழைப்பு, எடுத்த காரியம் கைகூடும், போசனசுகம், மேன்மை. |
| மிதுனம் | சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, திடீர் பயணம், முயற்சி தாமதம். |
| கடகம் | அபகீர்த்தி, திருடர் பயம், காரியதடங்கல், போசனசுகம். |
| சிங்கம் | நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, தேகநலன், உற்சாகம். |
| கன்னி | மனமகிழ்ச்சி, வாக்குமேன்மை, குடும்பநலம், சத்துரு ஜெயம். |
| துலாம் | சொத்துப்பிணக்கு, முயற்சி தாமதம், அஜிரணக் கோளாறு, பணக்குறைவு. |
| விருச்சிகம் | தாய்வழி உறவு, புதிய விடயம், முயற்சி தாமதம், சுபசெலவு. |
| தனுசு | வாக்குமேன்மை, போசன்சுகம், காரியநன்மை, சகோதரர் உதவி. |
| மகரம் | பணவிரயம், வேலைச்சுமை, உணர்ச்சி வசப்படல், காரியதாமதம். |
| கும்பம் | தெளிந்த சிந்தை, பிறர் ஆதரவு, தேகநலன், முயற்சி கைகூடும். |
| மீனம் | வேலைச்சுமை, பணவிரயம், மனவிரகதி, காரிய்தாமதம். |

- வளவன்

# கறுப்பு ஜூலை நினைவு நாளில் லண்டனில் பெரும் பேரணி

கறுப்பு ஜூலையின் 23ஆம் ஆண்டு நினைவு நாளாகிய எதிர்வரும் 25ஆம் திகதி லண்டனில் எழுச்சிப் பேரணியொன்று நடைபெற இருக்கின்றது. புலம் பெயர்ந்துவாழும் தமிழ்மக்களினால் உலகளாவிய ரீதியில் கறுப்பு ஜூலை நினைவுப் பேரணிகள் முன்னெடுக்கப்படும் அதேநாளில் லண்டனில் பாரிய ஒழுங்கமைப்புக்களுடன் வரலாறு காணாத அளவிற்கு பேரணி முன்னெடுக்கப்பட இருப்பதாக தெரியவருகின்றது.

லண்டனில் அதிபிரசித்தபெற்ற பகுதியாகவும் பிரித்தானிய மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பெருமளவில் கூடும் இடமாகவும் விளங்கும் ஹைட் பார்க் மைதானத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பேரணி மாலை 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதுவரை இடம்பெற்ற எழுச்சி நிகழ்வுகளையும், பேரணிகளையும்விட கூடுதலான அளவில் ஆயிரக்கணக்கில் பிரித்தானியா வாழ் தமிழ் மக்கள் கலந்துகொள்வது ஏதுவாக போக்குவரத்து ஒழுங்குகளும் ஏனைய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

'சாகப் பிறந்தவன் தமிழன் என்ற நிலையை மாற்றி சாவிலும் வாழ்வோம்' என தாயக மக்கள் உறுதி பூண்டுள்ள இவ்வேளையில் பிரித்தானியா வாழ் அனைத்து தமிழ் உறவுகளும் அணிதிரண்டு தேசத்தின் குரலை வெளிப்படுத்த முன்வருமாறு பேரணி அமைப்பாளர்கள் அழைப்புவிடுத்துள்ளனர். (த)

# சமுர்த்தி நிவாரணம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் சமுர்த்தி நிவாரணம் எடுப்பவர்களுக்கு கடந்த 10ஆம் திகதி திங்கள் முதல் நிவாரணம் வழங்கப்பட்டுவருகின்றது. இம் முறை அரிசி மட்டும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (த-72)

# மண்ணெண்ணெய் விநியோகம்

(இணுவில்)

மருதனார் மடம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தற்போது தேவையான அளவு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது. முன்பு விவசாயிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த-122)

# மத்தியஸ்த சபை அறிமுக விழாக்கள்

தெல்லிப்பழை மத்தியஸ்த சபையின் அறிமுகவிழாக்கள் எதிர்வரும் 16, 18, 20ஆம் திகதிகளில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்திலும், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலத்திலும், கட்டுவன் புலம் மகாவித்தியாலயத்திலும் பி.ப.3 மணிக்கு நடைபெறவுள்ளன.

நாளை 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் நடைபெறும் அறிமுக விழாவுக்கு தெல்லிப்பளை மத்தியஸ்த சபை பிரதம மத்தியஸ்தர் க.அமிர்தலிங்கம் தலைமை வகிப்பார். சண்டிலிப்பாய்மத்தியஸ்த சபை தவிசாளர் கே.ஜெகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

18ஆம் திகதி செவ்வாய் கிழமை பி.ப.3 மணிக்குஇளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில், தெல்லிப்பளை மத்தியஸ்த சபை பிரதம மத்தியஸ்தர் மு.சிவராசரத்தினம் தலைமையில் நடைபெறும் அறிமுகவிழாவில் சங்கானை மத்தியஸ்த சபைத் தவிசாளர் வி.சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

20ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு கட்டுவன்புலத் மகா வித்தியாலயத்தில் தெல்லிப்பளை மத்தியஸ்த சபை பிரதம மத்தியஸ்தர் க.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் அறிமுகவிழாவில் உடுவில் மத்தியஸ்தசபை தவிசாளர் க.தம்பித்துரை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (து)

# இலங்கையர் 2000 பேருக்கு மொரீஷியாஸில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

மொரீசியஸ் நாட்டின் ஆடைத் தொழிற்சாலைகளில் 2000 இலங்கையருக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மொரீசியஸ் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைய திறமையுள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்குஆடைத்தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐரோப்பிய நாடுகளில்தகைமையுள்ளஇலங்கை தாதியர்களுக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையர்களுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதை துரிதப்படுத்துவதன் மூலம் அந்நிய நாட்டு செலாவணியை அதிகரித்துக் கொள்ள முடியுமென்றும் அமைச்சு குறிப்பிடுகிறது. முதலில் 28 சதவீதமாகவிருந்த அந்நியநாட்டு செலாவணி விகிதமானது 2005 ஆம் ஆண்டிலிருந்து 30 சதவீதமாக அதிகரித்துள்ளது.

மேலும்கொரியநாட்டின்தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பத்தைப்பெற விரும்புவோர் கொரிய மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. கொரியாசர்வதேசஸ்தாபனமொன்று இலங்கையில் கொரிய மொழிக் கற்கை நிலையமொன்றை விரைவில் நிறுவவுள்ளதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(த-7)

# எனது செயலுக்கு மன்னிப்பு கேட்கிறேன் ஆனால் வருத்தப்படமாட்டேன்; மற்ரஸியை தண்டிக்க வேண்டும்

## மனம் திறந்து பேட்டியளித்தார் ஜிடேன்




(பாரிஸ்)

ஜிடேன் தனது செயலுக்காக சிறுவர்கள் உள்ளிட்ட தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த கோடிக்கணக்கான மக்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார். ஆனால் அந்த சம்பவத்துக்காக வருத்தம் தெரிவிக்க மறுத்து விட்டார். தன்னைத் தூண்டிய மற்ரஸியையும் தண்டிக்க வேண்டும் என்றும் பகிரங்கமாக கோரியுள்ளார்.

18ஆவது உலக கோப்பை உதைபந்தாட்டத் தொடர் ஜேர்மனியில் நடந்தது. இறுதிப் போட்டியில் இத்தாலி அணி பிரான்ஸை வீழ்த்தி கோப்பை வென்றது. இப்போட்டியில் பிரான்ஸ் அணித்தலைவர் ஜிடேன் இத்தாலி வீரர் மற்ரஸியின் நெஞ்சில் தலையால் முட்டி கீழே தள்ளினார். உடனே ஜிடேன் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப் பட்டார்.

இப்பிரச்சினை உதைபந்தாட்ட உலகில் பெரும் பூகம்பத்தை கிளப்பியது. இது தொடர்பாக பல்வேறு செய்திகள் வெளியாயின. மற்ரஸி அப்படிச் சொன்னார்... இப்படி திட்டினார்... என்று ஆளாளுக்கு ஒரு கதையை கிளப்பினர். இந்தச் சூழலில் ஜிடேன் மௌனம் கலைக்கிறார் என்ற செய்தி கேட்டதும் பிரான்ஸ் நாடே பரபரப்பானது. ரசிகர்கள் அனைவரும் தொலைக்காட்சி முன் அமர்ந்து அவரது பேட்டியைக் கண்வெட்டாமல் பார்த்தனர். மற்ரஸியை தலையால் முட்டிய சம்பவம் பற்றி பிரான்ஸின் கேனால் பிளஸ் தொலைக் காட்சிக்கு ஜிடேன் அளித்த பேட்டி:

* இத்தாலி மண்ணில் சுமார் 5 ஆண்டுகள் விளையாடி இருக்கிறீர்கள். அவர்களைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். இதற்கு முன் ஏதாவது ஒரு வீரருடன் இது போன்று பிரச்சினை ஏற்பட்டதுண்டா?

*யாருடனும் மோதல் ஏற்பட்டது இல்லை. சில நேரங்களில் சிலருடன் தள்ளுமுள்ளு ஏற்படும். அவ்வளவுதான்! இது உதைபந்தாட்டத்தில் சகஜமான ஒன்று. இதைத் தவிர யாருடனும் கைலப்பில் ஈடுபட்டதில்லை.*

* மற்ரஸியுடன் கூட மோதல் ஏற்பட்டதில்லையா?

*இல்லவே இல்லை! அவருடன் எவ்வித மோதலும் கிடையாது. உலக கோப்பை உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் எனது சட்டையைப் பிடித்து அவர் இழுத்த பிறகு தான் பிரச்சினை ஆரம்பமானது. எனது சட்டையை விடாமல் இழுத்ததும் சட்டையை இழுப்பதை நிறுத்து. வேண்டுமானால் போட்டி முடிந்ததும் இருவரும் சட்டையை மாற்றிக்கொள்ளலாம் என்று சாதாரண மாக நான் கூறினேன். அந்த நேரத்தில்தான் மற்ரஸி தகாத வார்த்தைகளைக் கொட்டினார். அது செய்கையால் காண்பிப்பதை காட்டிலும் கடினமானதாக இருந்தது. அதே வார்த்தைகள் திரும்பத் திரும்ப சொல்லி வெறுப்பேற்றினார். இதெல்லாம் மிக விரைவாக நடந்து விட்டது. அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும் எனது மனதில் இடியாக இறங்கியது.*

* அவர் அப்படி என்னதான் சொன்னார்..? அந்த வார்த்தைகள் என்ன...? என்பதை அறிய ஒவ்வொருவரும் ஆவலாக இருக்கிறார்கள்?

*அது மிகவும் சீரியசான விஷயம். மிகவும் தனிப்பட்ட விஷயங்கள்.*

* உங்கள் தாய் மற்றும் சகோதரியை பழித்துப் பேசினாரா?

*ஆமாம்! மிகவும் கடுமையான சொற்கள். ஒரு தடவை கேட்டாலே அங்கிருந்து ஓடி விடுவீர்கள். அப்படியிருக்கையில் இரண்டு தடவை... மூன்றாவது தடவை என தொடர்ந்து சொல்லும் போது நானும் மனிதன் தானே! சில வார்த்தைகள் செயலைக் காட்டிலும் கடினமானது. அந்த வார்த்தைகளைக் கேட்பதற்கு பதிலாக எனது முகத்தில் ஓங்கி ஒரு அடி கொடுத்திருந்தாலும் கூட ஏற்றுக்கொண்டிருப்பேன்.*

* உங்கள் தாய், சகோதரிக்கு எதிரான வார்த்தைகளை இரண்டு அல்லது மூன்று முறை சொன்னாரா?

*ஆமாம்! இதற்கு நான் பதிலடி கொடுத்தேன். அந்த மாதிரி செயல்பட்டிருக்கவே கூடாது. ஏனென்றால் சிறுவர்கள் உட்பட கோடிக்கணக்கான மக்கள் போட்டியை பார்த்துக்கொண்டிருந்தனர். சிறுவர்களிடம் இதைச் செய்யலாம். அதைச் செய்யக்கூடாது என்று கற்றுத்தர வேண்டிய நிலையில் நிறைய பேர் இருந்திருப்பார்கள். அவர்களிடம் எல்லாம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.*

* நீங்கள் மன்னிப்புகேட்கிறீர்கள். ஆனால் அந்த சம்பவத்துக்காக உண்மையிலேயே வருத்தப்படவில்லையா?

*நான் வருத்தம் தெரிவிக்க முடியாது. அப்படித் தெரிவித்தால் எதையும் சொல்வதற்கு மற்ரஸிக்கு உரிமை இருப்பது போலாகி விடும்.*

*மேலும் அவர் சொன்னது எல்லாம் தவறான வார்த்தைகள். நாம் எப்போதுமே ஒரு பதிலடியை பற்றித்தான் பேசுகிறோம். அதற்கு தான் தண்டனையும் அளிக்கிறோம். ஆனால் யாரும் தூண்டவில்லை என்றால் பதிலடியும் இருக்கப்போவதில்லை என்பதை உணரவேண்டும். எரிச்சலைத் தூண்டுகிறவர்தான் குற்றம் செய்தவர். ஆனால் பதிலடி கொடுத்தவர் தண்டிக்கப்படுகிறார். நான் பதிலடி கொடுததேன். அந்தச் சம்பவமும் நடந்துவிட்டது.*

*நீங்களே கற்பனை செய்து பாருங்கள். உலக கோப்பை இறுதிப் போட்டியில் எனது ஓய்வுக்கு இன்னும் 10 நிமிடங்கள் இருக்கும்போது நான் அந்த மாதிரி செய்தது எனக்கு மகிழ்ச்சி தருமா?*

* நிச்சயமாக இல்லை. ஆனாலும் அந்த நேரத்தில் வெடித்து விட்டீர்களே?

*என்னைத் தூண்டினார்கள். அதுவும் மிகவும் சீரியசாக. அவ்வளவுதான்! எனது செயல் மன்னிக்க முடியாதது. ஆனாலும் உண்மையான குற்றவாளியையும் தண் க்க வேண்டும். அந்த உண்மையான குற்றவாளி என்னைத் தூண்டியவர் (மற்ரஸி) தான்!*

## இலங்கையில் நடைபெறும் முத்தரப்புத் தொடர் சவாலானது

### டோனி கூறுகிறார்



முத்தரப்பு தொடர் கடும் சவாலான தொடராக அமையும். இத்தொடரில் இந்திய அணி கண்டிப்பாக வெற்றிபெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் இந்திய வீரர் மகேந்திர சிங் டோனி.

இந்தியா, இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு தொடர் அடுத்த மாதம் 14ஆம் திகதி இலங்கையில் ஆரம்பமாகவுள்ளது.

இத்தொடர் குறித்து இந்திய அணியின் அதிரடி வீரர் மகேந்திரசிங் டோனி கூறியதாவது,

முத்தரப்பு தொடர் கடும் சவாலானதாக அமையும். மேற்கிந்திய தீவுகள் அணியுடன் டெஸ்ட் தொடரை கைப்பற்றிய இந்திய அணி தற்போது நல்ல நிலையில் உள்ளது. இதன் மூலம் மேற்கிந்திய தீவுகள் மைதானங்களில் எப்படி விளையாடுவது என்று அனுபவம் கிடைத்துள்ளது இது அடுத்த ஆண்டு அங்கு நடக்கவுள்ள உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் பெரிதும் உதவும். முத்தரப்பு தொடரில் இந்திய அணி நிச்சயமாக வெற்றி பெறும். இவ்வாறு டோனி கூறினார்.

### பாகிஸ்தான் – இங்கிலாந்து டெஸ்ட் தொடர்

## ஹொலின்வூட், குக் சதம் இங்கிலாந்து வலுவான நிலையில்



இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள பாகிஸ்தான் அணி டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இத் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி முதல்நாள் ஆட்ட நேர முடிவில் ஹொலின் வூட் , குக் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தினால் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் ஹொலின் வூட் 109 ஓட்டங்களையும் குக் 101 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணிசார்பாக அப்துல் ரஷாக் 2 விக்கெட்டுக்களையும் உமல்ஹல் 1விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இரண்டாவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

## ஜிடேன், மற்ரஸியிடம் நேருக்கு நேர் விசாரணை

ஜிடேன் பேட்டியை தொடர்ந்து சர்வதேச உதைபந்தாட்டக் கூட்டமைப்பு (பிபா) உடனடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது. ஜிடேனை கடுப்பேற்றிய மற்ரஸிக்கு கட்டளை அனுப்பியுள்ளது.

இந்த விவகாரத்தில் ஜிடேன் எழுத்து பூர்வமான விளக்கத்தை எதிர்வரும் 18ஆம் திகதிக்குள் அளிக்கவேண்டும். இதன் நகல் மற்ரஸிக்கு அனுப்பி வைக்கப்படும். பின்னர் இருவரும் பிபா ஒழுங்கு நடவடிக்கை குழு முன் நடக்கும் நேருக்கு நேர் விசாரணைக்காக எதிர்வரும் 20இல் ஆஜராகவேண்டும் . இதற்காக இருவருக்கும் முறைப்படி கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

## தோல்வியடைந்தமைக்காக விமர்சனங்கள் தேவையற்றது

### என்கிறார் ரொனால்டோ

உலக கோப்பை போட்டிகளில் பிரேசில் அணி தோல்வியடைந்ததை தொடர்ந்து எழுந்துள்ள விமர்சனங்கள் தேவையற்றது என நட்சத்திர வீரர் ரொனால்டோ கூறியுள்ளார்.

கடந்த 2002 இல் சம்பியன் பட்டம் வென்ற பிரேசில் அணி சமீபத்தில் ஜேர்மனியில் நடந்த உலக கோப்பை தொடரிலும் சாதிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காலிறுதியிலேயே தோல்வியடைந்து வெளியேறியது.

இதைத் தொடர்ந்து அந்த அணியின் மீது விமர்சனங்கள் கடுமையாக எழுந்தன. இதுபற்றி ரொனால்டோ கூறுகையில்,

பிரேசில் தோல்வியடைந்ததற்கு மிக அதிகமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது தேவையற்றது. எங்களது ஆட்டம் சிறப்பாகஇல்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இதில் மாற்று கருத்து இல்லை. ஒவ்வொரு முறையும் உலக கோப்பையை வெல்லுவது என்பது இயலாத ஒன்று. நான்கு வருடங்களுக்கு முன்பு கோப்பை கைப்பற்றியபோது ரசிகர்கள், பத்திரிகைகள் என அனைவரும் எங்களை பாராட்டினர். ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக உள்ளது. தோல்வி யடைந்ததற்கு பயிற்சியாளரை மட்டுமே குறை கூறக்கூடாது என்றார்.

#### ரொனால்டினோ மன்னிப்பு

பிரேசில் தோல்விக்கு மற்றொரு நட்சத்திர வீரர் ரொனால்டினோ மன்னிப்பு கோரியுள்ளார். இதுபற்றி ரொனால்டினோ தனது வெப் சைட்டில் கூறியிருப்பதாவது,

உலக கோப்பை தொடரில் பிரேசில் அணி சிறப்பாக விளையாடும் என ரசிகர்கள் ஆவலுடன் இருந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பை எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனது ஆட்டமும் திருப்தியளிக்கவில்லை.

எங்களது முழு திறமைக்கு ஏற்ப விளையாடாததால் தொடரிலிருந்து வெளி யேற நேரிட்டது. இதற்காக ரசிகர்களிடம் நான் மன்னிப்பு கோருகிறேன். அடுத்த உலக கோப்பை தொடரில் சிறப்பாக விளையாடுவோம்.

அமிர்தன்

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 26

முருக-தனுஷ்கோடி



பிற்காலத்தில் நியாயவாரச் சட்டம் முதலியவைகளைக் கொண்டுவந்து உழுது வாழும் தொழிலாளர்களுக்கு ஆதரவு தேடிக்கொடுத்தார். இதைக்கொண்டு பலனடைந்த ஏழை விவசாயிகள் தலைவரைத் தங்கள் தந்தைக்கு ஒப்பாகவே பாவித்து அன்பு காட்டினர்.

சாதாரண மனிதனுக்கு மகிழ்ச்சியூட்டும் வீடு, நிலம் ,வாகனம் , புத்தாடைகள் போன்ற எதுவும் அவருக்கு மகிழ்ச்சியூட்டுவதில்லை. ஆனால் மக்கள் ஏதோ ஒரு வகையில் தங்களுக்கு நன்மை ஏற்பட்டுச் சந்தோஷப்படுவதாகத் தெரிந்தால் அதைத் தாமே அனுபவிக்கும் உள்ளம் படைத்தவர் காமராஜ். அன்றும் அந்த ஏழை விவசாயிகளின் மகிழ்ச்சி அவரை ஆனந்தக் கடலிலே ஆழ்த்திவிட்டது. அவரைப் பாட்டாளிகளின் துணைவனாகச் செய்துவிட்டதும் அவரது இந்த உயர்ந்த பண்புதான்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் தொழிலாளர் பகுதியை ஏற்படுத்தி அதற்கான செலவுகள் எல்லாவற்றையும் ஏற்று அவர் ஆதரவு அளித்தார்.1,500 அங்கத்தினர்கள்.

சென்னையில் உள்ள சிம்ஸன் குரூப் தொழிலாளர்கள் சங்கத்தில் ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் எல்லாவற்றையும் திரு.காமராஜின் உதவி பெற்று அந்தச் சங்கம் சமாளித்தது.

தொழிலாளர் குறைகளை அனுதாபத்துடன் கேட்பதும் அவற்றைத் தீர்க்க அவ்வப்போது வழி செய்வதும், சர்க்கார் நிர்வாகத்தின் மூலமாக வேண்டிய உதவிகளைச் செய்வதும் தமது கடமையாக ஏற்றுக்கொண்டு தாமே அவற்றை மேற்கொண்டு செய்து வந்திருக்கிறார். தமிழ் நாட்டின் தொழிற்சங்க இயக்கத்தின் தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் காமராஜைத் தங்களின் சொந்தத் தலைவராக கருதியதில் வியப்பில்லை.

தொழிலாளர்களுக்குக் காமராஜ் செய்த சேவையைத் தனிச் சரித்திரமாகவே எழுதலாம் .தொழிலாளர்கள் அவரைத் தங்கள் தந்தையாகவும் தலைவராகவும் நண்பராகவும் ஊழியராகவும் கருதி னார்கள். அன்போடும் ஆதரவோடும் அணுகினார்கள்.

### 18.திருவிதாங்கூர் தமிழர்கள்

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த எஸ். நதானியேல் 1946 ஆம் ஆண்டு சென்னையில் காமராஜை சந்தித்தார் .திருவிதாங்கூர் தமிழ்நாடு விஷயமாகக் காமராஜிடம் நிலைமைகளை விளக்கினார்.

தாயைப் பிரிந்த சேய் போலத் திருவிதாங்கூர் தமிழர்கள் துடிதுடித்துக் கொண்டிருக்கிறோம். தாயகத்துடன் இணைந்து வாழ்வதைத் தடுக்க எல்லா முயற்சிகளும் கையாளப்படுகின்றன. இந்த நிலையில் தமிழகம் தலையிடாமல் இருந்தால் தமிழேயிராது. தமிழனும் அழிந்துவிடுவான். உங்களுடன் சேர்ந்து வாழ விரும்புகிறோம் . பிரிக்கப்பட்ட சேய் தாயைக் கண்டு உரிமை கேட்கிறது. உறுதி யளியுங்கள் என்று நாதனியேல் வேண்டினார்.

உங்கள் ஊரில் இருந்து வர வேண்டும் வர வேண்டும் எனக் கடிதங்களும் தந்திகளும் குவிந்து கொண்டிருக்கின்றன. வேலை நெருக்கடி! இதுவரை வர முடியவில்லை. நீங்கள் சமஸ்தான மக்கள் மட்டுமல்ல இன்றுள்ள காங்கிரஸ் கமிட்டிகளின் அமைப்பில் நீங்கள் கேரள காங்கிரஸ் கமிட்டியில் தான் சேர வேண்டியது வரும் . சட்டத்தை மாற்றினாலன்றி வேறு வழியில்லை. ஆனால் மொழி அடிப்படையில் மாகாணங்கள் அமைக்கப்படும் போது நிச்சயமாக நீங்கள் எல்லோரும் எங்களுடன் இணைக்கப்படுவீர்கள் நான். அங்கு வந்து விஷயங்களை நேரில் தெரிந்து வேண்டுவன செய்கி றேன் என்று காமராஜ் பதிலளித்தார்.

தொடர்ந்து சென்னையில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் தமிழ் நாட்டை ஒட்டிக்கிடக்கும் திருவிதாங்கூர் தமிழ்ப் பிர தேசங்களைக் காங்கிரஸ் பணிக்குத் தமிழ் நாட்டுடன் அங்கமாய்ச் சேர்க்க அகில இந்திய காங்கிரஸ் அனுமதி அளிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

திருவிதாங்கூரில் பொறுப்பாட்சிப் பிரகடனம் 1947 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 4ஆம் திகதி வெளிவந்தது. அதைத் தொடர்ந்து வயதுவந்தோர் ஓட்டுரிமையுடன் திருவிதாங்கூர் அரசியல் அமைப்பை மாற்றி அமைக்கத்தேர்தலும் நெருங்கியது.

எங்கள் இறுதி இலட்சியம் ஒன்றுபட்ட யூனியன். தமிழகம் எனத் தமிழர்கள் தேர்தல் பிரகடனம் செய்தனர். உடனே எங்கும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் அனுப்பப்பட்டனர். தடியடி, அடக்குமுறை, பொய் வழக்கு ஆகியவை அன்றாட நடவடிக்கைகள் ஆயின.

ஒன்றியே வாழ வேண்டும் இல்லையென்றால் மாள வேண்டும் எனத் தமிழர்கள் சபதம் செய்தனர். காமராஜுக்குத் தந்தி கொடுத்தார்கள் .உடனே வரவும் தமிழர்களின் உயிருக்கும் சொத்து சுதந்திரங்களுக்கும் பேராபத்து என்று அத் தந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. காமராஜ் உடனே விரைந்தார்.

கிராமம் கிராமமாகக் காமராஜ் விசாரணை செய்தார் .எங்கும் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழ் மக்கள் அனைவரும் காமராஜைத் தரிசித்தார்கள் .தங்கள் சங்கடங்களை எடுத்துச் சொன்னார்கள். தமிழர்களுடைய கல்வி , மொழி, கலை ஆகியவைகளைப் பாதுகாப்பதற்கு வசதி செய்ய வேண் டும். சமஸ்தான காங்கிரஸ் தலைவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினேன் .அது முழுவதுமாக முடிய வில்லை. பட்டம்தாணுப்பிள்ளையையும் நதானியேலையும் சென்னைக்கு அழைத்து ஒரு சமரச முடிவுக்கு வர முயல்வேன் என்று காமராஜ் சென்னை புறப்படுமுன் கூறினார்.

குறிப்பிட்ட திகதியில் பட்டம் தாணுப்பிள்ளை சென்னைக்கு வரவில்லை. தேர்தல் நடந்தது. அடக்குமுறை அட்டகாசங்கள் அனைத்தையும் தாண்டி வாழ்வா? சாவா? என்ற போராட்டத்தில் குதித்த தமிழர்கள் ஏகோபித்து ஓட்டளித்தனர் .தமிழகம் வெற்றி முரசு கொட்டியது. காமராஜின் விஜ யம் தமிழர்களுக்கு அங்கு உற்சாகத்தை ஏற்படுத்தியது. வெற்றிக்குக் காரணமாகவும் அது அமைந் தது.

### 19.வெற்றியின் இரகசியம்!

காமராஜ் தன்னை எதிர்த்த அரசியல் எதிரிகளை எவ்வாறெல்லாம் வென்று வருகிறார். இதை நான் அடிக்கடி நினைப்பதுண்டு. என்ன நேர்ந்தாலும் சரி அதை அவர் வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார். ஆத்திரப்பட்டு எதையும் செய்வதும் இல்லை. எத்தனையோ கட்டங்களில் அவர் எதிர்நீச்சல் போட்டிருக்கிறார். அந்த நேரங்களில் எல்லாம் அவர் தனது வேலையைச் செய்து கொண்டிருப்பாரே தவிர எடுத்த காரியங்களில் இருந்து பின் வாங்கியதே இல்லை. அவர் எப்போதும் சோர்ந்ததும் இல்லை. காந்திஜி காங்கிரஸ் சுதந்திரம் என்பதே அவருடைய மூச்சாக இருந்தது. காந்திஜி ஹரிஜன் பத்திரிகையில் எழுதியபோதும் சரி, கட்சிவிஷயங்களில் சோதனை ஏற்பட்டபோதும் சரி காங்கிரஸை விட்டு விலகிவிடலாம் என்ற எண்ணம் மட்டும் நொடிப்பொழுது கூட அவரிடம் தலைதூக்கவில்லை. அவரது அரசியல் வெற்றிக்குக் காரணங்கள் இவையே.

(தொடரும்)


புனித சதாசகாய அன்னை முன்பள்ளி மாணவர்களும் மாலை நேரக் கல்வி வகுப்பு மாணவர்களும் இணைந்து நடாத்தும்

வருடாந்த விளையாட்டு விழா 2006

இடம்:- புனித சகாய அன்னை ஆலயமுன்றல்
காலம்:- 15.07.2006 சனிக்கிழமை
நேரம்:- மாலை 2.30 மணி

தலைவர்
அருட்பணி ஜோசவ் பிரான்சிஸ்
(பங்குத்தந்தை)

பிரதம விருந்தினர்
அருட்பணி R.M.J. நேசநாயகம் அடிகளார்
(விளான் பங்குத் தந்தை)

கௌரவ விருந்தினர்
அருட்பணி றஞ்சிதகுமார்
(புனித ஹென்றியரசர் கல்லூரி உப.அதிபர்)

சிறப்பு விருந்தினர்கள்
திரு.கு.சிவலிங்கம்
(பிரதம முகாமைத்துவ உதவியாளர்
பிரதேச செயலகம் தெல்லிப்பழை)
திரு.மரிய அன்ரனி
(யாழ்.மாவட்ட கல்வித் திட்ட இணைப்பாளர் J.R.S)

மேற்படி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத்தந்தை
ஆசிரியர்கள் ,மாணவர்கள்,
பெற்றோர்கள்.

(C/404)


## அரச சேவையில் உள்ளோருக்கு அவுஸ்திரேலிய புலமைப்பரிசில்

(கொழும்பு)

அரசாங்க சேவையைச் சார்ந்தோருக்கு அவுஸ்திரேலிய அபிவிருத்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் 2007ஆம் கல்வி ஆண்டுக்கான 6 முதுமாணி கற்கைக்கான புலமைப்பரிசில்கள் அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. அத்தோடு அவுஸ்திரேலிய அபிவிருத்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இலங்கையின் கல்வி அபிவிருத்திகளுக்காக தொடர்ந்தும் உதவவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 23 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள அரச துறை நிறுவனங்களின் நிதி மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பின் செயற்பாட்டை விருத்தி செய்வதற்காக இந்த 6 முதுமாணி கற்கைகளுக்கான புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளதாக குறிப் பிடப் பட்டுள்ளது.

அரசாங்க சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கும் அவுஸ்திரேலியாவில் வாழ்வதற்கும் கற்பதற்குமான சிறந்த வாய்ப்பை வழங்கும் பொருட்டே அவுஸ்திரேலிய அபிவிருத்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி ஜூலை 23 என முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் தற்போது அது ஜூலை 21 என மாற்றப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (த-7)

## கோப்பாய் ,பலாலி ஆசிரிய கலாசாலை பயிற்சி நெறி 24ஆம்திகதி ஆரம்பம்

(கோப்பாய்)

கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளில் இவ் வாண்டு புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் எதிர் வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஆசி ரிய கலாசாலை அதிபர்களுக்கான கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

பலாலி ஆசிரிய கலாசாலையில் இம் முறையும் ஆங்கில பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் இப் பாடநெறியை மேற்கொள்ளும் வட பகுதி ஆசிரிய மாணவர்கள் தென்னிலங்கையில் உள்ள ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சியை பெறச் செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. (து-7)

## கிராம அலுவலருக்கு புதிய அலுவலகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை ஜே/52 கிராம அலுவ்லருக்கு உதவி அரசாங்க அதிபர் பணி மனைக்கு அருகாமையில் சிறுவர் வளர்கம், பூங்காப் பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் அலுவலகம் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-72)

# சதாம் உசேன் உண்ணாவிரதம்

(பக்தாத்)

ஈராக் முன்னாள் சர்வாதிகாரி சதாம் உசேன் தன்சார்பில் ஆஜராகும் வக்கீல்கள் கொல்லப்பட்டதை எதிர்த்து சிறையில் கடந்த 7 நாட்களாக உண்ணா விரம் இருந்து வருகிறார்.

சதாம் உசேன் மீது ஷியா முஸ்லிம்களை சித்ரவதை செய்து கொலைசெய்ததாக வழக்கு நடந்துவருகிறது. இந்த வழக்கில் அவருக்காக ஆஜரான வக்கீல்களில் ஒருவரான கமீஸ் அல் ஒபைதி கடந்த மாதம் கொல்லப்பட்டார். இந்த வழக்கு தொடங்கிய கடந்த அக்டோபர் மாதத்தில் இருந்து கொல்லப்படும் 3ஆவது வக்கீல் இவர். இவருக்கு முன்பு ஏற்கனவே 2 பேர் கொல்லப்பட்டனர்.

தனது வக்கீல்கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் நீதிமன்ற நடைமுறைகள் ஒருதலைப்பட்சமாக இருப்பதை எதிர்த்தும் சதாம் உசேன் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வரு கிறார். அவர் கடந்த 7ஆம் திகதி இரவு உண்ணாவிரதத்தை தொடங்கினார். 7 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அவருடன் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள அவரது 3 சகாக்களும் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். இந்த தகவலை அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. (கு)



தாய்லாந்து நாட்டில் உள்ள சன்டாபரி மாகாணத்தில் உள்ள வன பகுதியில் சேற்றில் சிக்கி கொண்ட யானையை மீட்கும் முயற்சி நடைபெற்று வருகிறது

# இஸ்ரேல் விமானங்கள் லெபனானில் தாக்குதல்!

## 10 சிறுவர்கள் உட்பட 27பேர் பலி

(பெய்ரூட்)

லெபனானின் பெய்ரூட் நகரில் சர்வதேச விமான நிலையம் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று முன்தினம் அதிகாலை சரமாரியாக குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் 10 சிறுவர்கள் உட்பட 27 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.



இஸ்ரேல் லெபனான் எல்லை பகுதியில் புதன்கிழமை லெபனானின் ஹெஸ்பொல்லா தீவிரவாதிகளுக்கும் இஸ்ரேல் இராணுவத்தினருக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இச்சண்டையில் இஸ்ரேல் இராணுவ வீரர்கள் எட்டுபேர் கொல்லப்பட்டனர். மேலும் இரு வீரர்களை தீவிரவாதிகள் பிடித்துச் சென்றனர்.

இதையடுத்து அவசரமாக இஸ்ரேலின் அமைச்சரவை கூட்டம் நடந்தது. அதில் லெபனானின் ஹெஸ்பொல்லா தீவிரவாதிகளுக்கு எதிராக தக்க பதிலடி கொடுக்க முடிவு செய்யப்பட்டது. 'அமைச்சரவையின் இந்த முடிவை அடுத்து இஸ்ரேல் இராணுவத்தினர் விமானத்தாக்குதலை நடத்தினர்.

இது தொடர்பாக லெபனான் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், இஸ்ரேல் போர் விமானங்கள் பெய்ரூட்டில் உள்ள சர்வதேச விமான நிலையம் மீது திடீரென தாக்குதல் நடத்தின. சரமாரியாக குண்டுகளை வீசின. விமான ஓடுதளங்கள் மீது ஏவுகணைத் தாக்குதலும் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் சிறுவர்கள் 10பேர் உட்பட 27 பேர் பலியாயினர்.

மேலும் விமான நிலையம் சேதமடைந்ததால் பெய்ரூட்டில் தரையிறங்க வேண்டிய விமானங்கள் சைப்ரஸ் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும் தாக்குதல் காரணமாக புதிதாக சீரமைக்கப்பட்ட பெய்ரூட் விமான நிலையமும் மூடப்பட்டது என்றார்.

இதற்கிடையே ஹெஸ்பொல்லா தீவிரவாதிகளும் இஸ்ரேலின் வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலையில் ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் இஸ்ரேல் நாட்டை சேர்ந்த பெண் ஒருவர் கொல்லப்பட்டார். (கு)

# இந்தியப் பிரதமர் - ரஷ்ய அதிபர் 17ஆம் திகதி சந்தித்துப் பேச்சு

(மாஸ்கோ)

ஜி-8 நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதமர் மன்மோகன் சிங் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் எரிசக்தி மற்றும் பாதுகாப்பு விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

ரஷ்யாவில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் ஜி-8 நாடுகளின் உச்சி மாநாடு நாளை நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் மன்மோகன்சிங் ரஷ்யா செல்கிறார். மறுநாள் திங்கட்கிழமை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

எரிசக்தி பாதுகாப்பு மற்றும் விண்வெளி ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் பேச்சு நடத்துகின்றனர். இரு தரப்பு ஒத்துழைப்பில் அரசியல் தலைமையிலான தலையீடு தேவைப்படும் விஷயங்களை பற்றி இரண்டு தலைவர்களும் மறு ஆய்வு செய்வார்கள்.

முக்கியமாக எரிசக்தி குறித்து மன்மோகன்சிங் விளாடிமிர் புடினுடன் விரிவாக பேச்சுவார்த்தை நடத்துவார் என்று ரஷ்யாவுக்கான இந்திய தூதர் கன்வல்சிபல்தெரிவித்தார்.



நாளொன்றுக்கு 10 இலட்சம் பரல் எண்ணெய் விநியோகிப்பது தொடர்பாக உறுதிஅளிக்க வேண்டும் என்று ரஷ்யாவுக்கு இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது. அதே போல் ரஷ்ய எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் மின்சார துறைகளில் பங்கு அளிக்க வேண்டும் என்று இந்தியா கோரி வருகிறது . (கு)

# சீனாவில் வெள்ளம் 4,000 பேர் பாதிப்பு

சீனாவின் வடகிழக்குப் பகுதியில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 4 ஆயிரம் பேர் தங்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான பகுதிக்களுக்குச் சென்றனர்.

இந்த வாரம் ஹெய்லாங்ஜியாங் மாகாணத்தில் புயலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் அந்த மாகாணத்திலுள்ள 3 மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இச்சுன் நகரத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கியுள்ள 4 ஆயிரத்து 300குடும்பங்களை மீட்கும் பணி கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கியது. மழையினால் யாரும் உயிரிந்ததாகத் தெரியவில்லை. நிலச்சரிவினால் ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. (கு)



ஜெர்மனி சென்றுள்ள அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் அந்நாட்டு அதிபர் ஏஞ்சலினா மெர்கில்லை சந்தித்து பேசினார்

# ஷியா முஸ்லிம்கள் 24 பேர் ஈராக்கில் கடத்திக் கொலை

(முக்தாதியா)

ஈராக்கில் ஷியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த 24 பேர் கடத்திக்கொலை செய்யப்பட்டனர். ஈராக் வந்துள்ள அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்டு ரம்ஸ்பீல்டு பாதுகாப்பு நிலவரம் குறித்து ஈராக் பிரதமர் நூரி அல்-மாலிக்கியுடன் பேச்சு நடத்திக்கொண்டிருக்கும் நிலையில், இந்தப் படுகொலை நடந்துள்ளது.

ஈராக்கில் சமீப காலமாக ஷியா, சன்னி முஸ்லிம் பிரிவுகளுக்கு இடையில் மோதல் அதிகரித்துவரும் நிலையில் ஈராக்கின் முக்தாதியா நகரில் இருந்து ஷியா பிரிவைச் சேர்ந்த 26பேர் கடந்த புதன்கிழமை கடத்திச்செல்லப்பட்டனர்.

அவர்களில் 24பேர் கொலை செய்யப்பட்டு அவர்களது சடலங்கள்அருகில்உள்ள சீஹம் என்ற கிராமத்தில் தோட்டங் களில் வீசப்பட்டுக் கிடந்தன. தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட இராணுவத்தினர் அந்த சடலங்களைக் கண்டனர். மற்ற இருவரது கதி என்ன என்பது தெரியவில்லை கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அங்குள்ள குவாரிகளில் தொழிலாளர்களாகவும் டிரைவர்களாகவும் பணியாற்றி வந்த ஹர்குஷ் பழங்குடி ஷியா முஸ்லிம்கள். (கு)

WORLD NEWS
உலக தரிசனம்

# தலாய்லாமாவுக்கு உடல்நலக்குறைவு ஐரோப்பிய பயணம் ரத்தானது

(தரம்சாலா)

புத்தமதத் துறவி தலாய்லாமா உடல்



நலக்குறைவு காரணமாக தனது ஐரோப்பிய பயணத்தை இரத்து செய்தார். இவர் சமயசொற்பொழிவு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக கடந்த ஜூலை 11 ஆம் திகதி முதல் இரண்டு வார காலம் பிரான்ஸ், ஸ்பெயின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்ய திட்டமிட்டிருந்தார்.

ஆனால் தலாய்லாமா தற்போது கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதால் பயணத்தை ரத்து செய்யவேண்டும் என்று டாக்டர்கள் கேட் டுக்கொண்டனர். இதனை தொடர்ந்து தனது ஐரோப்பிய பயணத்தை தலாய்லாமா ரத்துச் செய்தார். (கு)

படிப்புக்கள் அனைத்திலும் அதி உன்னதமான படிப்பு மனிதன் எப்படியிருக்க வேண்டும். எதைத் தேட வேண்டும் என்ற படிப்புத்தான்.

-பிளேட்டோ

வலம்புரி

# தகவல் தொழில்நுட்ப அறிவியலில் கவனம் செலுத்த வேண்டும்

யாழ்ப்பாணத்தில் படித்த இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி பெரும் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர்.

இதனால் மனித மூலதனம் வீணாகிப் போவதுடன் சமூக கலாசார விழுமியங்களிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தவே செய்கின்றது.

பாடசாலை கல்விக்குப் பின்னர் பல்கலைக்கழக அனுமதி பெற முடியாதவர்கள் தமது எதிர்கால கற்றல் செயற்பாடுகளில் அக்கறையற்றவர்களாகவேயுள்ளனர்.

இதற்கு உரிய வழிகாட்டல் இன்மையே காரணமாகும். பல்கலைகழக அனுமதி பெற முடியாதவர்கள் வெளிவாரியாகப் பட்டம் பெறும் வாய்ப்புக்கள் தற்போது தாராளமாகவுள்ளது.

அதுமட்டுமேயின்றி இன்று சர்வதேசம் முழுவதிலும் வேலை வாய்ப்பைத் தரக்கூடிய தகவல் தொழில் நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ளும் வசதி வாய்ப்புக்களும் உண்டு.

இருந்தும் அது விடயத்தில் பாடசாலை படிப்பை நிறைவு செய்தவர்கள் அக்கறையற்றவர்களாகவே இருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதியைப் பொறுத்தவரை இங்கு உலகின் வேகமான வளர்ச்சி போக்குக்கு ஏற்ப தகவல் தொழில் நுட்ப அறிவு ஏற்படவில்லை என்றே கூறவேண்டும்.

இதற்கு அரசின் திட்டமிட்ட செயலும் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மின்சார வசதி, கணனி வசதி இல்லாத பாடசாலைகள் ஏராளம்.

கணனி என்றால் என்ன? அதன் வடிவமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதுகூட தெரியாத மாணவர்கள் நூற்றுக்கணக்கான பாடசாலைகளில் இருக்கின்றார்கள் என்ற பரிதாபமான செய்தி வேதனைக்குரியது.

இதற்கு கல்வித் திணைக்களங்களின் ஒழுங்கற்ற நிர்வாகமும் பங்கிடலில் ஏற்படக் கூடிய செல்வாக்குச் செலுத்துகையும் காரணமாக அமைகின்றன.

அரசினால் வழங்கப்படுகின்ற கணனிகளை பெரிய பாடசாலைகளுக்கு மட்டும் ஒதுக்கி விட்டு சிறிய பாடசாலைகளை கவனிக்காது விடுவதால் பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கணனி அறிவையிழந்து போகின்றனர்.

எனவே இது விடயத்தில் கல்வித் திணைக்களப் பணிப்பாளர்கள் கவனம் செலுத்த வேண்டும். இளமைக் கல்வியில் ஆங்கிலமும் கணனி அறிவும் புகட்டப்படுவதன் ஊடாக சர்வதேச தரத்திலான வேலைத் திறன் மிக்க இளைஞர், யுவதிகளை நாம் உருவாக்க முடியும்.

இன்று வேலை வாய்ப்பு இல்லாமல் பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் பரிதவிப்பதற்கு மேற்கூறிய ஆங்கில மொழித் திறனும் கணனி அறிவியலும் இல்லாமை முக்கிய காரணம் என்பது நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

இந்த உண்மையைப் புரிந்து கொண்டு அத்தகைய குறைபாட்டை தற்போதைய மாணவர் சமூகமும் அனுபவிக்காமல் இருப்பதற்கான ஏற்பாடுகளை செய்வது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தீவுப்பகுதியைச் சேர்ந்த இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை காலை 8.00 மணிக்கு தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இப் பயிற்சிக் கருத்தரங்கில் ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு, காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீவுப்பகுதி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.சிறிமோகனன், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலகர் கணக்காளர் எஸ்.கிருபாகரன், நிர்வாக உத்தியோகத்தர் ஜி.கிருபைநாதன் மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் க.நாகராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நந்திக்கொடியேற்றல், இறைவணக்கத்தினைத் தொடர்ந்து வரவேற்புரையினை பிரதேச கலாசார அபிவிருத்தி உதவியாளர் வி.விஜயரட்சகன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து விரிவுரை களை “சித்தாந்த முப்பொருள் உண்மை” என்னும் தலைப் பில் முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம், “பன்னிரு திருமுறைகளும் பண்ணும் அறநீதிக் கருத்தும்” என்னும் தலைப்பில் சைவப்புலவர் எஸ்.நித்தியதசீதரன், “ஈழத்திலும் தமிழகத்திலும் சைவ சமய வரலாறும்” என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி மையத்தைச் சேர்ந்த போதனாசிரியர் ந.விஜயசுந்தரம், “விர தங்களும் பண்டிகைகளும் சமய ஆத்மீக விழுமியமும்” என்னும் தலைப்பில் சமூக சேவை அலுவலகர் வே. சிவராஜா, “அறநெறிக் கல்வி கற்பித்தலின் முக்கியத்துவம்” என்னும் தலைப்பில் எஸ்.உதயபாலன், “இந்து ஆலயங்களின் கலை களின் வளர்ச்சியும்” என்னும் தலைப்பில் சைவப் புலவர் க.கமலநாதன் ஆகியோர் நிகழ்த்துவர்.

(த-133)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணனிப் பிரிவு தமிழ் அதிகாரி கைது

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சி... இடங்களின் திட்டங்களையும் கொள்ளுப்பிட்டி அலரி மாளிகைக்கு அருகில் இருக்கும் பாதைகளையும் வீடியோவில் பதிவு செய்து வைத்திருந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணனிப்பிரிவு தமிழ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்த கணனியும் ஆவணங்களும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம், கட்டுநாயக்க விமான நிலையத்தின் எண்ணெய்ப்பிரிவு, கொலன்னாவ எண்ணெய் கட்டடத் தொகுதி ஆகிய இடங்களின் திட்டங்கள் அவரிடம் இருந்துள் ளன. மேலும் எண்ணெய் தாங்கிகள், எண்ணெய் சுத்திகரிப்புக் கருவிகள் மற்றும் கொள்ளுப்பிட்டி பெற்றோலியக் கூட்டுத் தாபன தலைமையகம் ஆகியவற்றை அவர் படம் எடுத்து வைத்திருந்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகில் இருக்கும் பாதைகள் மற்றும் அலரி மாளிகைக்குச் செல்லும் பாதைகளையும் வீடியோவில் பதிவு செய்திருந்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனைத்துப் பிரிவினதும் கணனிகளைத் திருத்தும் பணி அவரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. அனைத்து கணனிகளினதும் தொடர்பு அவரிடம் இருந்துள்ளது. கணனிகளை திருத்தச் செல்கையில் அந்தக் கணனிகளில் இருக்கும் இரகசிய ஆவணங்கள் மற்றும் தரவுகளை அவர் பிரதியெடுத்துள்ளார். இந் நபர் எண்ணெய் கூட்டுத் தாபனத்தின் பாதுகாப்புப் பிரிவு பெண் அதிகாரி ஒருவருடன் தொடர்புகளை ஏற்படுத்தி அந்தப் பிரிவின் விவரங்களைக் கண்டறிந்துள்ளார்.

இந்தப் பிரதிகளை உயரதிகாரிகளின் அனுமதியின் பேரிலேயே பெற்றுக்கொண்டதாக சந்தேக நபர் தெரிவித்துள்ளார். அவர் எதற்காக இந்த த் தகவல்களைத் திரட்டினார் என்ற விவரங்களைக் கண்டறிவதற்காக தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

(அ)

# இறுவட்டுக்கள் வெளியீடு

இளைய இசையமைப்பாளர் இசைப்பிரியனின் புதிதாய் பிறப்பெடுப்போம் மற்றும் கடற்கரும்புலிகள் -பாகம் 10 ஆகிய இறுவட்டுக்களின் வெளியீட்டு விழா நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 7.30 மணிக்கு புதுக் குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மைதானத்தில் போராளியும் கவிஞருமான வீரா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வின் முன்னதாக பொதுச்சுடரினை கரும்புலி மேஜர் மலர்விழியின் சகோதரன் விஸ்ணகுமார் ஏற்றிவைத் தார்.

வரவேற்புரையினை தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் கவிஞருமான பொன்காந்தன் நிகழ்த்தினார். வெளியீட்டுரையினை விடுதலைப் புலிகளின் கலைப்பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தின துரை நிகழ்த்தினார்.

சிறப்புரையினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் நிகழ்த்தினார். கடற்கரும்புலிகள் பாகம் 10 இறுவட்டினை கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன் வெளியிட்டு வைக்க மாவீரர் லெப்.கமல், லெப்.சங்கர் ஆகியோரின் சகோதரன் போராளி சங்கர் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்தும் “புதிதாய்ப் பிறப்பெடுப்போம்” இறுவட்டினை படையணி தொடக்க பயிற்சிக் கல்லூரி கல்விப் பிரிவு மகளிர் பொறுப்பாளர் மலர்விழி வெளியிட்டு வைக்க, கடற்கரும்புலி சந்தனாவின் தாயார் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து இறுவட்டுக்காக உழைத்த பாடலாசிரியர்கள், பாடகர்கள் கௌரவிக்கப்பட்டனர். தமிழீழத்தின் புகழ் பூத்த பாடல்களில் இன்னிசை கானங்களும் இடம் பெற்றது.

(து)

# நவோதயா பாடசாலை வாரம்

கல்வியமைச்சினால் வருடம் தோறும் நடாத்தப்பட்டு வரும் நவோதயா பாடசாலை வாரம் -2006 இம்முறை யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 15.07.2006 - 21.07.2006 வரை ஒரு வாரம் கொண்டாடப்படவுள்ளது.

நவோதயா பாடசாலை வாரத்தினையொட்டி 15.07.2006 சனிக்கிழமையும் 16.07.2006 ஞாயிற்றுக்கிழமையும் பாடசாலையில் மாபெரும் சிரமதானப்பணிகள் நடைபெறவுள்ளன.

17.07.2006 திங்கட்கிழமை சமய விழுமிய தினம் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் காலை 7.45 மணி முதல் நடைபெறும் நிகழ்வில் சர்வமத பிரார்த்தனை ஆன்மீக சொற்பொழிவு விசேடமாக ஆடிப்பிறப்பினையொட்டிய ‘ஆடிக்கூழ்’ வழங்கும் நிகழ்ச்சி ஆகியன இடம் பெறவுள்ளன.

யாழ். வலயப் பாடசாலைகளில் நவோதயா பாடசாலை வாரம் கொண்டாடப்படும் இரு பாடசாலைகளில் கனகரத்தினம் மகா வித்தியாலயமும் ஒன்றாகும்.

(து)

# தீவிர விசாரணை

(கொழும்பு)

கடற்புலிகளுடன் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்படும் 31பேர் மட்டக்குளி காக்கை தீவில் அமைந்துள்ள தேசிய மீனவ மற்றும் கடற்படை எஞ்ஜினியரிங் நிறுவனத்தில் பயிற்சி பெற்றுள்ள சம்பவம் தொடர்பாக அரசு தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றது.

மேற்படி 31 பேருக்கும் கொழும்புத் துறைமுக உட் பகுதிலேயே பயிற்சியளித்து வந்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. தேசிய பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் இந் நட வடிக் கை பற்றிய விபரங்கள் ஜனாதிபதிக்கு தெரிய வந்துள்ளதாகவும் அரச உயர்மட்ட தகவல்களிலிருந்து தெரி யவந்துள்ளது.

மேற்படி 31பேரும் பொலிஸ் விசேட விசாரணைப் பிரி வினரால் கைது செய்யப்பட்ட பின் பிரதான சுயாதீன இயக்க அத்தியட்சகரால் பிணையில் எடுக்கப்பட்டுள்ளனர். அரசுக்கு சொந்தமான தேசிய மீனவ கடற்படை எஞ்ஜினியரிங் நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்கான அனுமதியையும் மேற்படி சுயாதீன இயக்கமே பெற்றுக்கொடுத்ததாகவும் தெரியவந்துள்ளது.

(த-7)

# கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலக எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் இருபாலை சந்தியை அண்டிய பிரதேசங்களிலும் இன்று கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

ஆகவே பொது மக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களை அன்றைய தினம் கட்டி வளர்க்குமாறு அப்பகுதி மக்களை கோப்பாய் உப அலுவலக பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

(து)

# கிளைமோரிலிருந்து தப்பினார் அமைச்சர் ரம்புக்வெல

(கொழும்பு)

அரசாங்கத்தின் பாதுகாப்பு பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல கிளைமோர் தாக்குதலிலிருந்து உயிர் தப்பியுள்ளார். கண்டியில் உள்ள அவரது இல்லத்திருந்து 100மீற்றர் தொலைவில் இரு கிளைமோர் குண்டுகள் பொருத்தப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் அதைக் கண்டுபிடித்துவிட்டதாகவும் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தொலைக்காட்சியான ஐ.ரி.என்னுக்கு அளித்த நேர்காணலில் ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

தான் கண்டிக்குச் செல்ல இருந்ததாகவும் ஆனால் முக்கிய பணி நிமித்தமாக கொழும்பிலே இருந்ததாகவும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இரு கிளைமோர் குண்டுகளை கண்டுபிடித்தனர் என்றும் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். குண்டுகளை செயலிழக்கும் பிரிவினரால் அக்குண்டு கள் செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(து)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



உன் மனம் குளிர்ந்திருந்தால் உலகத்தில் உனக்கு எதிரி ஒருவருமில்லை. இந்த ‘தான்’ என்கின்ற கர்வத்தை விடு. எல்லோரும் உன்னிடத்தில் அன்பு கொள்வார்கள்.

சுவாமி விவேகானந்தர்

# கடற்சமர் அதிகரிப்புக் குறித்து கண்காணிப்புக்குழு கவலை

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கடற்கண்காணிப்புப் பணிகளை இடைநிறுத்தியதன் பின்னர் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் அதிகரித்துள்ளதாக கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இந்த மோதல்கள் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக குழுவின் பேச்சாளர் தோஃபினூர் ஏமர்ஸன் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்பிற்கு தம்மால் உறுதி வழங்க முடியாது என்று விடுதலைப்புலிகள் தெரிவித்ததையடுத்து கண்காணிப்புக் குழு தனது கடற்கண்காணிப்புப் பணிகளை நிறுத்தியுள்ளது.

தமது அமைப்பைத் தடைசெய்த ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர்களின் விடயத்திலேயே இந்த நிலைப்பாட்டினை தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்டனர் என அவர் தெரிவித்தார். (து-9)

# செயல்முறைப் பரீட்சை திகதிகளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த வாரத்தில் நடைபெறவிருந்த வாகனம் ஓட்டும் செயல் முறைப் பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிய திகதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

மாற்றம் செய்யப்பட்ட செயல் முறைப் பரீட்சைக்கான புதிய திகதிகள் வருமாறு,

| செயன்முறைப் பரீட்சை நடைபெற இருந்த திகதி | செயன்முறைப்பரீட்சை நடைபெறவுள்ள புதிய திகதி | நேரம் |
|---|---|---|
| 2006.07.17 பி.ப.2 மணி | 2006.07.29 | மு.ப. 9 மணி |
| 2006.07.19 பி.ப. 2மணி | 2006.07.29 | மு.ப. 9 மணி |
| 2006.07.20 பி.ப.2மணி | 2006.07.30 | மு.ப. 9 மணி |
| 2006.07.21 பி.ப. 2மணி | 2006.07.30 | மு.ப. 9 மணி |

(ச-5)

# இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சின்ன ஊரணிப் பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.நேற்றுக் காலை 7 மணியளவில் காந்திபுரம் சிவன் கோவிலடியில் வீடொன்றினுள் புகுந்த இனந்தெரியாதோர் வீட்டினுள் இருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதன் போது நவரட்ணம் துஷ்யந்தன் (வயது-22)என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மற்றொருவர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

# வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பை ரத்து செய்யக் கோரி வழக்குத் தாக்கல்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையடுத்து 1987 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்பை செல்லுபடியற்றதாக அறிவிக்கக் கோறி மக்கள் விடுதலை முன்னணி இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றுமொரு அரச அதிகாரியுமாக மூவர் நேற்று உயர் நீதிமன்றில் மூன்று வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

அப்போது பதவியிலிருந்த அரசு நாட்டின் வடக்கையும் கிழக்கையும் ஒரு நிர்வாக அலகாக எடுத்த முடிபு தவறு என்றும் அவ்வாறானதொரு பிழையான முடிபினை எடுத்ததன் ஊடாக மக்களின், குறிப்பாக கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுவிட்டன என்றும் ஆகவே அந்த வர்த்த மானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக்க வேண்டும் என்றும் கோரி ஜே.வி.பியின் திகாமடுல்லை தேர்தல் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் லங்கா பலிகெதர வசந்தவும் ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசேகரவும் இன்னொரு அரச அதிகாரியும் நேற்று உயர் நீதிமன்றில் ஒரே மாதி ரியான மூன்று வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.இவ் வழக்குகளின் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், கிழக்கு வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் தேர்தல் ஆணையாளர்ஆகியோர் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.(ச-5)

# அடிக்கல் நாட்டு விழா

உதை பந்தாட்ட பயிற்சி நிலையத்தின் அடிக்கல் நாட்டுவிழா இன்று காலை மு.ப.11 மணிக்கு அல்வாய் நண்பர்கள் விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.இதில் முதன்மை அதிதியாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார்.ஸ்ரீலஸ்ரீ பொன்.வெங்கடேஸ்வரக் குருக்களும் வண பிதா. டேவிட் அழகராஜா வும் ஆசியுரை வழங்கவுள்ளனர்.

சிறப்பு அதிதியாக உதவிப் பொதுச் செயலாளர் எவ்.எவ்.எஸ்.எல்.அன்ரன் தங்கேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.விசேட அதிதிகளாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரனும் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலனும் மரு தங்கேணி பிரதேச செயலர் வி.வீரபத்தி பிள்ளையும் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதியும் வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (து-த-133,7)

# ஐவர் மீதான பொடா வழக்கை தமிழக அரசு மீளப் பெற்றது

(சென்னை)

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன், பொதுச் செயலாளர் பரந்தாமன், சாகுல் ஹமீட், பேராசிரியர் சு.ப.வீரபாண்டியன், மருத்துவர் தாயப்பன் உள்ளிட்ட ஐந்து பேர் மீதான பொடா வழக்குகளை தமிழ் நாடு அரசாங்கம் திரும்பப் பெற்றுள்ளது.

தமிழ் நாடு உயர் நீதிமன்றத்தில் நேற்று தமிழ் நாடு அரசாங்கத்தின் சார்பாக இத் தகவல் தெரிவிக்கப்பட்டது. வழக்கு நடைபெறும் பூவிருந்தவல்லி பொடா நீதிமன்றத்திற்கு இத் தகவல் தெரிவிக்கப்பட்ட பின்னர் பொடா வழக்குகள் ரத்து செய்யப்படும்.

மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ.மீதான வழக்கு இந்திய தலைமை நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் இது குறித்த முடிபை தமிழ் நாடுஅரசு இன்னமும் தெரிவிக்கவில்லை என பேராசிரியர் சு.ப.வீரபாண்டியன் தெரிவித்தார். (ச-5)



மட்டக்களப்பு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகனேரியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதலில் உயிரிழந்த இராணுவத்தினரது சடலங்களைப் படத்தில் காணலாம்.

# வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்திற்கு 2005/2006 கல்வியாண்டுக்கான அனுமதியைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளும் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வுக்கு முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட அனைத்து புதுமுக மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி தேவராஜா கேட்டுள்ளார். (ச)

## க.கா.குழுவிற்கு...

மீண்டும் சுட்டிக்காட்டினோம். இருப்பி னும் இராணுவத்தினர் பின்வாங்காத நிலை யில் பதில் தாக்குதல் நடத்த நேரிட்டது.

தாக்குதலுக்கு முன்னராகவே மக்களை அக்கிராமத்திலிருந்து வெளியேறிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டோம். எமது ஜெந்தன் படையணியினர் திருப்பித் தாக்கும் அணியினர் அப்பகுதிக்குச் சென்று பதில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பல படையினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்த நிலையில் தப்பியோடிவிட்டனர். கொல்லப்பட்ட 12 இராணுவத்தினரது உடல்களைக் கைப்பற்றியுள்ளோம்.

இராணுவத்தைச் சேர்ந்த கோப்ரல் நிலையிலான ஒருவரை கைதுசெய்துள்ளோம். அப் பகுதி எமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இராணுவத்தினரை அவர்களது பழைய நிலைக்கு திருப்பியனுப்ப 2 மணித்தியாலம் நேரமானது.

எங்கள் போராளிகள் சம்பவ இடத்திற்குச் சென்ற போது 75 இராணுவத்தினர் அந்த இடத்தில் இருந்ததாக தெரிவித்தனர். 150 இற்றும் மேற்பட்ட இராணுவத்தினர் வலிந்து தாக்குதலை மேற்கொள்ள ஊடுருவியிருந்ததாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதலுக்குப் பின்னர் கண்காணிப்புக்குழுவினரை அப் பகுதிக்கு அழைத்து எவ்வளவு தூரம் இராணுவத்தினர் ஊடுருவியிருக்கின்றனர் என்பதையும் இராணுவத்தினர்களது உடல்களையும் கைதுசெய்யப்பட்டநபரையும் காட்டியுள்ளோம்.

கொல்லப்பட்ட இராணுவத்தினர்களது உடல்களை இன்று ஒப்படைக்கவுள்ளோம். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் இது குறித்துக் கூறியுள்ளோம். இராணுவத்திடம் கேட்டுவிட்டுச் சொல்வதாக சொல்லியிருக்கிறார்கள்.

இன்னமும் எங்களுக்கு அவர்கள் பதில் தரவில்லை. இராணுவத்தினர் உடல்களை கேட்டால் இன்று காலையே ஒப்படைப்போம் என தயாமோகன் தெரிவித்தார். (ச-5)

## அம்பாறை...

அதில் இருவர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் ஒருவர் உயிருக்கு மிகவும் ஆபத்தான நிலையில் கடற்படை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அதன்பின் உயிரிழந்தார் என்றும் தம் மீது சினைப்பர்த் தாக்குதலே நடத்தப்பட்டது என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

## தயா மாஸ்டரை...

இயக்கம் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

தயா மாஸ்டர் சிகிச்சை பெற்றுவரும் வைத்தியசாலையின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடாத்தியுள்ளது.

இதேவேளை சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்ட தயா மாஸ்டரின் உடல் நிலை தேறி வருவதாக வைத்தியசாலை தரப்புக்கள் தெரிவிக்கின்றன. (ச-9)

## இராணுவத்தின் தாக்குதல் முயற்சி...

மட்டக்களப்பு வாகனேரியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி ஊடுருவிய இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தினர்.

விடுதலைப்புலிகளின் பகுதிக்குள் 5 கிலோமீற்றர் தூரம்வரை ஊடுருவி குளத்துமடுப் பகுதிக்கு முன்னேறிய இராணுவ ஆழ ஊடுருவும் அணியை விடுதலைப்புலிகளின் ஜெயந்தன் படையணி, குடிம்பிமலைக் கோட்ட சிறப்புத் தாக்குதல் படையணி, சிறப்பு மோட்டார் சைக்கிள் படையணி என்பன வழிமறித்து உக்கிர தாக்குதல் நடத்தியதாக விடுதலைப்புலிகள் அறிவித்தனர்.

அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமான இத்தாக்குதல் நண்பகல் 11 மணிவரை தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து மோட்டார் ஆட்லறித் தாக்குதல்கள் என்பன நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் இராணுவத் தரப்பில் 12 பேர் கொல்லப்பட்டனர். ஒருவர் விடுதலைப் புலிகளினால் உயிருடன் பிடிக்கப்பட்டார். இறந்தவர்களின் சடலங்களை விடுதலைப் புலிகள் மீட்டுள்ளனர். பிடிபட்டவர் லான்ஸ் கோப்ரல் விஜயமல கருணாரட்ண(வயது-24) என தெரிவிக்கப்பட்டது.

இவர் விஜயபாகு இலகு காலாள் படைப் பிரிவில் நான்காவது ரெஜிமென்டைச் சேர்ந்தவர். இவர் மொனறாகல மாவட்டத்தைச் சேர்ந்தவர் என விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட இராணுவத்தினரில் நால்வர் கோப்ரல் நிலையினர். இராணுவத்தினரிடமிருந்து ஆர்.பி.ஜி. ஒன்று, ஆர்.பி.ஜி. எல்.எம். ஜி.துப்பாக்கிகள் இரண்டு, சிங்கப்பூர் 40 மில்லி மீற்றர் துப்பாக்கி ஒன்று, ஏ.கே. கைத் துப்பாக்கி 8, தொலைத் தொடர்பு சாதனம் ஒன்று, ரவைத் தடுப்பு அங்கிகள் 7, இராணுவப் பை 10மற்றும் பெருமளவு ரவைகள் உட்பட இராணுவத் தளபாடங்கள் தம்மால் மீட்கப்பட்டதாகப் புலிகள் தெரிவித் தனர்.

இதேவேளை மக்கள் குடியிருப்புக்கள் ஊடாக நுழைந்த இராணுவத்தினர் அவர்களின் பொருட்கள் சிலவற்றையும் அபகரித்துச் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இத் தாக்குதலையடுத்து வாகனேரிப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இது இவ்வாறிருக்க மட்டக்களப்பின் சில பகுதிகளிலிருந்தும் இராணுவத்தினர் ஊடுருவ முயன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அத் தாக்குதலையும் விடுதலை புலிகள் தடுத்துநிறுத்தியதாகத் தெரிய வருகின்றது. இத் தாக்குதல் நடைபெற்ற இடங்களுக்குச் சென்ற இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இராணுவத்தினரது சடலங்களைப் பார்வையிட்டனர். (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.